உ
சிவமயம்



# சைவநீதி
# SAIVANEETHI

மலர் 23 | விகாரி சித்திரை – ஆனி | 2019 April - June | இதழ் 1–3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் - இணுவில் கிளை
## சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர் 2017, 2018 பட்டமளிப்பு விழா 03.02.2019









யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரிடம் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படுகின்றன.






கதிர்காமம் திருத்தல யாத்திரை. 14.07.2019










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி



மலர் 23 விகாரி சித்திரை, வைகாசி, ஆனி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் 1 - 3

**தொடக்குநர்:**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்,
சித்தாந்தச்செம்மணி.
**திரு. செ. நவநீதகுமார்** M.A.

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
கொழும்பு.

No. 1/2, 'B' Block,
Govt. Flats,
Hospital Road,
Dehiwela.
Tel: 0779 008 286

## இதழின் உள்ளே

| | | |
|---|---|---|
| 1. | கந்தபுராண சிந்தனை | 2 |
| 2. | சிவனடியாரின் சிவானந்த நிலை | 5 |
| 3. | பெரியபுராணத் தொடர் எறிபத்தநாயனார் | 9 |
| 4. | முதலாவது மலேசிய ஆன்மிகப் பயணம் | 12 |
| 5. | எதிரது தழீஇய சிந்தனை வேண்டும் | 16 |
| 6. | திருக்குறட்கதை தேய்ந்தது | 19 |
| 7. | கோயில் அமைப்பு | 23 |
| 8. | அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம் | 28 |
| 9. | சைவசமயம் மாணவர் அறிவுப் பெட்டகம் | 33 |
| 10. | யாப்பிலக்கணம் உறுப்பியல் - அடி | 37 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணச் சிந்தனை - சிவனும் சிவகுமாரனும்

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம் செல்வி கி. வீரசிங்கம் (ஓய்வு நிலை அதிபர்)

புராணம் என்பது பழமையானது எனப் பொருள்படும். வேத தத்துவங்களை, தருமங்களை, நீதிகளை அமைத்துக் கதையாகக் கூறுவதுடன், இம்மையிலும் மறுமையிலும் மனிதன் வாழவேண்டிய வழிமுறைகளை வகுத்துக் கூறுவனவும் புராணங்களே. இந்த வகையில் அறநெறியையும் நீதியையும் உயிர்கள் அறிந்து, உணர்ந்து, பாசநீக்கம் பெற்று, இறைவன் திருவடி இன்பத்தைப் பெறும் பொருட்டு, கந்தபுராணம் மலர்ந்துள்ளது என்று கூறலாம்.

முருகப்பெருமானின் திருவருள் கூடப்பெற்ற கச்சியப்பசிவாசாரியரால் கந்தபுராணமானது, 10345 விருத்தப் பாக்களில் 6 காண்டங்களாகப் பகுத்துப் பாடப்பட்டதாகும். முருகப் பெருமானாலேயே அடியெடுத்துக் கொடுக்கப்பட்டு, அவரருளால் சரிபார்க்கப்பட்ட தெய்வீக நூலாகும். முழுமுதற் கடவுளின் கருணையையும், முருகப் பெருமானின் தெய்வீகப் பெருமைகளையும், சைவசித்தாந்த விழுமியங்களையும், மேன்மைகொள் சைவநீதியையும் புலப்படுத்திக் கொண்டிருக்கும் ஓர் ஒப்பற்ற நூலாகக் கச்சியப்பர் அருளியுள்ளார்.

கந்தபுராணத்தை மனமுருகிப் படிப்போர் பெறும் பயன் பற்றி

> ''**இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்றினிது மேவிச்**
> **சிந்தையி நினைந்த முற்றிச் சிவகதியதனிற் சேர்வர்**'' (பாயிரம் - 4)

என நூலாசிரியர் கூறி, அதன் அருமையையும், பெருமையையும், அருளையும் பற்றி அறியத்தருகின்றார்.

தக்கன் வேள்வியில் கலந்து கொண்ட தகாத செயலுக்காக நந்தியின் சாபம் பெற்ற தேவர்கள், அசுரர்களால் நீண்ட காலமாகத் துன்பம் அனுபவிக்கின்றார்கள். இங்கிருந்தே கந்தபுராணக்கதை ஆரம்ப முளை விடுகின்றது. தேவர்கட்குக் கொடுமை புரிந்த அசுரர் தலைவன் சூரபன்மனையும், அவன் கூட்டத்தையும் தொலைத்து ஒதுக்கி, அறத்தையும், நியாயத்தையும் நிலைநாட்ட ''**ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய**'' எனப் பாடுகின்றார். (1-11-92)

அருட்குமரன் தோற்றமும், அவனது, திருவிளையாடல்களும் தொடர்ந்து, சூரபன்மன்வதை நோக்கி கதை வளர்ந்து, 108 யுகங்களாக, 1008 அண்டங்களை ஆண்டு, அடாவடித்தனமும், அட்டகாசமும் செய்த அசுரன் சூரபன்மன், இறுதியில் ஆணவம் அடங்கி சேவலும், மயிலுமாகின்றான்.

''**தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால், தூயவர் ஆகிவிடுவர்**'' என்ற உண்மையும் முருகப் பெருமானின் தெய்வீகப் பெருமையும், கருணையும், அருளாற்றலும் கதையில் உணர்த்தப்படுகிறது. சூரபன்மன் இறுதியில் முருகனிடம் வரம்பிலா அருள் பெறுகின்றான். இதனையே நூலாசிரியர் தனது முதலாவது அவையடக்கப் பாடலில்

> ''**அறுமுகமுடையவோர் அமலன் மாக்ததை**
> **சிறியதோர் அறிவினேன் செப்ப நின்றதே**''

என்று கூறுகின்றார்.

பகைவரைத் தேய்த்து, நம்பினோரைக் காத்து, வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் கருணைக் கடலாகிய கந்தனின் உதிப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"**செந்தழல் மேனியன் தீயின் வண்ணமாத்**
**தந்தனன் குமரனைத் தனாது கண்ணினால்**"
என சிவனையும் குமாரனையும் உயர்வுபடுத்திப் பாடுகின்றார்.

அசுரர் கூட்டத்தை அழித்து தேவர்கட்கு ஆறுமுகன் வாழ்வளித்தான் என்ற செய்தியிலிருந்து, துன்பத்தில் அமிழ்ந்திருக்கும் உயிர்கள், மெய்யன்போடு அவனை நம்பி வழிபடின், அவர்களது துயர்போக்கி, அவலமறுத்து, வாழ்வும் வளமும் வழங்கவல்ல வள்ளல் அவனே, என்பதைக் கதைமூலம் ஆசிரியர் அடியவர்களுக்குப் புலப்படுத்துகின்றார்.

முருகனின் தோற்றப் பொலிவை, கருணையுருவை அழகொழுகப் பாடுகின்றார் கச்சியப்பர்.

"**அருவமு முருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே**"(1-11-92)
என முருகன் தோற்றப் பொலிவைக் காட்டிய ஆசிரியர் தொடக்கத்திலிருந்து இறுதிவரை முருகனைச் சிறந்த போர் வீரனாகக் காட்டுகின்றார். முதன் முதல் போர்க்கோலத்தில் முருகனை சூரபன்மன் கண்ட காட்சியை,

".... **அநந்த கோடிஞாயிறு திரண்டொன்றாகி ஞாலமேல் இருளைஓட்டிச்**
**சேயுயர் விசும்பை நீக்கிச் செருநிலத் துற்றதென்னத்**
**தூயதோர் குமரன் போரில் தோன்றிய தோற்றங் கண்டான்**" (4-4-234)
என்கிறார். பகைவனாகிய சூரபன்மன் சிவகுமாரனின் திருப்பெருவடிவம் கண்டபோது, தன்னையறியாது பக்தியுணர்வு மேலிட

"**போயின அகந்தை போதம் புகுந்தன ........**
**விண்ணோர் நாயகன் வடிவம் கண்டேன் நற்றவப் பயன் ஈதன்றோ**"
என்றும் (4-13-443)

"**சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை**
**தாழுதல் வேண்டும் சென்னி துதித்துடல் வேண்டும்**" (4-13-444)
என்றும் அஞ்ஞானம் கரைந்த நிலையில் மெய்ஞ்ஞானத்தைக் காண்கிறான்.

இவ்வாறு கந்தன் துதிபாடிய நூலாசிரியர், சிவனை மதித்துப் போற்றும் தலைவனாக கந்தனை நூல் முழுக்கக் காட்சிப்படுத்துகிறார்.

கந்தபுராணத்தை ஆழமாக அலசி ஆராய்ந்தோமாகில், கந்தபுராண தலைமைக் கடவுள் சிவனே என்ற சிந்தனை எம்முள்ளத்தில் உதிக்கும். சிவனை மதியாது, தேவர்கள் தக்கன் வேள்விக்குச் சென்றதன் விளைவை அனுபவித்தார்கள். இவ்வாறு கந்தபுராணக் கதைச் சிக்கலைத் தோற்றுவித்தவர் சிவனே. தேவர்கள் தமது துயர்களைய வேண்டி, தவம் செய்து சிவனை வழிபட, சிவனருளால்

"**ஏவர்தம் பாலும் இன்றி எல்லைதீர் அமலற்கு உள்ள**
**மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் வந்தது என்னப்**
**பூவியல் சரவணத்தண் பொய்கையில் வைகும் ஐயன்**
**ஆவிகள் அருளும் ஆற்றால் அறுமுகம் கொண்டான் அன்றே**" (1-11-94)
என முருகன் தோற்றத்தை அறியத் தருகின்றார்.

அந்தவகையில் தோற்றுவிக்கப்பட்ட சிக்கலைத் தீர்க்கவும் அருள்புரிந்தவர் சிவனே. அங்ஙனம் சிவனின் திருவருளால் தோன்றிய முருகப்பெருமான், அசுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரபன்மனை அடக்க, தேவர்கள் துயர்களைய, சிவனின் கட்டளையை ஏற்றே போருக்குப் புறப்படுகின்றார். படைகளும் படைக்கலன்களும் சிவனால் முருகனுக்கு நல்கப்படுகின்றன. கூடவே, கந்தன் வெற்றிக்கு உறுதுணையாக வேலாயுதம் சிவனால் படைக்கப்பட்டு, வேலவனுக்கு அருளப்படுகின்றது.

முருகனைத் தேவர்களும், சிவனை முருகனும் தேவர்களும் வழிபட்டுப் பூசனை செய்கின்றார்கள். போர் ஆரம்பமாகிவிட்டது. சூரனின் உடன்பிறந்தான் தாரகாசுரனை வதம் செய்த பின்னர், தெற்கு நோக்கிச் சென்ற முருகன் திருக்கேதாரத்திலிருந்து திருவாரூர் வரை சிவன் எழுந்தருளியிருக்கும் தலங்களை அன்புடன் பணிந்து வழிபட்டுச் சென்றமையை வழிநடைப்படலம் (1-23) சுரம்புகு படலம் (1-25) மூலமாக நாம் அறியக்கூடியதாகவுள்ளது. திருச்சேய்ஞலூரில் சிவனை வழிபாடு செய்து பகைவரை வெல்லும் சிவப்படை (பாசுபதாத்திரம்) பெற்றுக்கொண்ட செய்தியையும் குமாரபுரிப் படலம் (1-24) மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு நோக்குமிடத்து கந்தபுராணத்தின் தலைமைக் கடவுள் சிவனே என்று நாம் கருதிக்கொள்ள வேண்டியுள்ளது. சிவனருளால் உதித்த கந்தன் சிவனின் ஏவுதல்களை ஏற்று, அவரது அருளாணையின் வண்ணமே தன்பணியைத் தொடருகின்றார்.

இது தவிர, நூலின் பல்வேறு இடங்களிலும் சிவனின் முதன்மைத் தன்மையை வெளிப்படுத்திக் கொண்டே கதையை வளர்த்துக் செல்கின்றார். பூமியில் உள்ளவர்கள் எந்தத்தேவரை வணங்கினாலும், அவ்வழிபாடுகள் எல்லாம் சிவன் திருவடி சென்று சேரும் எனக் கூறுகின்றார்.

''**மண்ணவர் அமரர் யாரை வணங்கினும் அவைகள் எல்லாம்**
**நண்ணிய பரமன் தாளில்**'' (1-3-5)

மேலும், தட்ச காண்டத்தில் நான்முகன் தன்மகன் தக்கனுக்கு எல்லோருக்கும் மேலவன் சிவனே என்று உரைப்பதும் இங்கு சுட்டிக்காட்டலுக்குரியதாகின்றது.

''....... **நாரணன் தானும் யானும்**
**அன்றமர் இயற்றும் எல்லை அழலென எழுந்து வானில்**
**சென்றதோர் சிவனே யார்க்கும் மேலவன் தெளிநீஎன்றான்**''

தொடர்ந்து சங்கார காலத்தில் எம்மை அழிக்கும் சிவன், பின் படைப்புக்காலத்தில் தாயும் தந்தையுமாய் நின்று வினைகட்கு ஏற்ப தனு, கரண, புவன போகமளிப்பான் என்ற செய்தியைக் கூறி, அப்பெருமானின்றி நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை என சிவனின் முழுமுதற் தன்மையை மேன்மைப்படுத்தி நான்முகன் கூறுவதை ஆசிரியர் நமக்கு வெளிப்படுத்துகின்றார்.

''........ **வந்தவா றொடுங்கச் செய்து மன்னியே மீட்டும் அன்னை**
**தந்தையாய் உயிர்கட் கேற்ற தனுமுதல் அளிக்கும் முக்கண்**
**எந்தைதன் செய்கை முற்றும் இனையதென் றிசைக்கப்பாற்றோ**'' (6-1-9)
''**எங்களால் முடியுஞ்செய்கை யாவதும் இல்லை கண்டாய்**'' (6-1-10)

இவ்வாறு கதையாசிரியர் சிவபிரானின் முழுமுதற் தன்மையை முன்னிலைப்படுத்தி, மேம்படச் செய்து புராணத் தலைவனுக்காகிய மகிமையை ஏற்படுத்துகின்றார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவனடியாரின் சிவானந்த நிலை

திருமுறைநெறிச்செல்வர், சித்தாந்தரத்தினம், சிவஞானச்சுடர், திருமந்திரச்சுடர்
திருமதி. கேசினி கோணேஸ்வரன்

உடம்புடன் கூடியிருக்கும்போதே இறைவனின் திருவடியை அணைந்து சிவானந்தத்தை அனுபவிப்போர் அணைந்தோர் எனப்படுவர். இவர்கள் இவ்வுலகத்தில் வாழ்ந்தபோதும் உலக நினைவின்றிச் சிவத்தில் அழுந்தி, சிவானந்தத்தில் திளைத்திருப்பர். இந்நிலையை "தூங்காமல் தூங்குதல்" என பெரியோர்கள் கூறுவார்கள். தம்மையும் உலகையும் மறந்திருத்தலால் தூங்குதலும், சிவத்தை உணர்ந்து சிவானந்தத்தை அனுபவிப்பதால் விழித்திருத்தலும் என்ற இருநிலைகளும் ஒருங்கே நிகழ்வதால், இவ்வாறு கூறுகின்றனர். இவ்வுலகில் சீவிக்கும்போதே முத்திநிலை பெற்றவர் என்ற கருத்தில் சீவன் முத்தர் எனவும் கூறுவர்.

சைவசித்தாந்த நூல்கள் பலவற்றிலும், திருமுறைகளிலும் அணைந்தோர் தன்மை பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. அணைந்தோர்க்கு பிராரத்தவினை காரணமாக இன்பம் விளையினும், துன்பம் நேரினும், தாமரையிலையில் தண்ணீர் போல அவற்றில் சிறிதும் பற்றின்றி, இறைவன் திருவடியையே பற்றி நிற்பார். இதனையே சேக்கிழார் "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்" என்று கூறுகிறார். திருநாவுக்கரசு நாயனாரின் "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம் ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம் **இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை**" என்ற தேவாரமும் சிவனின் திருவடியை பற்றி நிற்பவர்களின் நிலை பற்றி கூறுகிறது.

அணைந்தோரது அறிவும், இச்சையும், செயலும் சிவனின் திருவடியிலேயே அழுந்தியிருக்கும். மலவாசனை காரணமாக அவை உலக விடயத்துக்கு செல்லும் போதெல்லாம் அவர்கள் திருக்கோவிலுக்கு சென்று வணங்குதல், சிவனடியார்களை வணங்குதல், திருவைந்தெழுத்து ஓதுதல் போன்றவற்றை செய்து மீண்டும் அவற்றை சிவனின் திருவடியில் அழுந்த வைப்பர். இதனை உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்த பின்வரும் திருவருட்பயன் பாடல் விளக்குகிறது.

"புலன் அடக்கித் தம்முதற்கட் புக்குறுவார் போதார்
தலம்நடக்கும் ஆமை தக." - திருவருட்பயன் (94)

ஆமை தனக்கு துன்பம் நேரப் போகிறது என உணர்ந்தால், தன் உறுப்புகளை ஓட்டின் உள்ளே இழுத்து அசைவற்றுக் கிடப்பது போல, அணைந்தோர் மலவாசனை காரணமாக உலகப் பற்றுகள் தாக்கும் என உணர்ந்தால், புலன்களை அடக்கி சிவனின் வியாபகத்துள் ஒடுங்கி இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார் அருளிச் செய்த திருவுந்தியார் என்ற நூலில் 16ஆவது பாடலும் இதே கருத்தை விளக்குகிறது.

"உழவா துணர்கின்ற யோகிகள் ஒன்றோடுந்
தழுவாது நிற்பரென் றுந்தீபற
தாழ்ந்த மணிநாப்போ லுந்தீபற."

திருவருளையே உணர்ந்து அனுபவிக்கும் சிவயோகிகள், உலகத்தவர் போல ஒழுகினர் ஆயினும், ஒன்றையும் தம் செயலாகக் கொண்டு ஒழுகாமல் எல்லாவற்றையும் சிவன் செயலாகவே நினைந்து ஒழுகுவார்கள். அதனால் தரையில் வைக்கப்பட்ட மணியின் நாக்குப் போல அவர்களின் உயிர் அறிவும் செயலற்றுக் கிடக்கும்.

"அறிவறிவாய் நிற்கில் அறிவுபல வாமென்(று)
அறிவின் அறிவவிழ்த்துக் கொண்டவ் - வறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தோர்கள் மானுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோல் தான்."

என்ற திருக்களிற்றுப் படியார் பாடலும் (32) இதே கருத்தையே வலியுறுத்துகிறது.

அணைந்தோர் சிவனின் திருவடியில் சிவானந்தத்தில் திளைக்க மட்டுமே விரும்புவர். "கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு", "வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்", "போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்" போன்ற திருவாசகப் பாடல் வரிகளில் மணிவாசகர் இந்நிலையைக் குறிப்பிட்டுள்ளார்.

அணைந்தோர்க்கு நிட்டைக்கு யோக்கியமாகக் கருதப்படும் புண்ணியத் தலங்களின் தரிசனமும், இன்ன காலத்தில் இது செய்ய வேண்டும் என்ற கால சங்கற்பமும், இன்ன திக்கு நன்று, இன்ன திக்கு தீது என்ற திக்குக் கற்பனையும், பத்மாசனம் முதலான ஆசனங்களில் இருக்க வேண்டும் என்ற நியமமும், சமயக் கோட்பாடுகளும், வேடம், ரூபம், ஆசாரம் முதலியவற்றில் அபிமானமும், ஏனைய நியமங்களும் தானாகவே ஒழிந்துபோகும். அணைந்தோர் சிவனடியார்களையும், சிவலிங்கம் முதலான திருமேனிகளையும் சிவமென்று கண்டு வணங்கி, கண்களில் ஆனந்த அருவி சொரிய நாத்தழுதழுப்ப உரை தடுமாற ஆனந்த வெள்ளத்துள் அமிழ்ந்து, சிவத்தையே தரிசித்திருப்பர். இந்நிலையைத் திருஞானசம்பந்தர் "காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி" எனவும், மாணிக்கவாசகர் "மெய்தானரும்பி விதிர் விதிர்த்து" எனவும் உணர்ந்து பாடியுள்ளனர்.

சிவானந்த நிலை என்பது முதல்வன் உடனாக நின்று அறிவிப்பதோடு தனக்காக அறிந்தும் வரும் பேருபகாரத்தை நினைந்து அவனிடத்தே அன்பு மேன்மேலும் கிளர்ந்து எழ, அவனோடு கலந்து அழுந்தி நிற்றல். அவ்வாறு அழுந்தி நிற்றலை மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்கால் அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய், யான் இதற்கு இலனோர் கைம்மாறு"
திருவாசகம் - கோயில் திருப்பதிகம் - 2

சமயகுரவர்கள் உள்ளடங்கலான அறுபத்து மூன்று நாயன்மார்கள், சித்தர்கள் போன்றோர் என்றும் அணைந்தோர் என்ற நிலையில் இருந்தவர்கள். திருஞானசம்பந்தர் என்பு நிறைந்த குடத்திலிருந்து எழுதவொண்ணா எழிலோடு திருமகளைப்போல எழுந்த பூம்பாவையில் சிவத்தையே கண்டார். அதிபத்த நாயனார் வறுமையில் வாடியபோதும், வலையில் அகப்பட்ட பொன் மீனை "சென்று சேர்க சிவன் கழலே" என்று கூறி கடலில் விட்டார். மெய்ப்பொருள் நாயனார் தன்னை வாளால் வெட்டியவனிலும் சிவத்தைக் கண்டு அன்பு பாராட்டிய நிலை வியக்கத் தக்கது. திருக்களிற்றுப் படியாரிலும், பெரிய புராணத்திலும் அடியார்களின் சிவானந்த நிலை பற்றி பல இடங்களிலும் காணலாம்.

அணைந்தோர் எந்நேரமும் சிவ சிந்தனையில் அழுந்தி, சிவானந்த நிலையைத் துய்த்துக் கொண்டிருப்பர் என்பதனை சிவஞானசித்தியாரின் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

"பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞானம் அஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கம்
தருஞானம் போகஞா திருஞான ஞேயம்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகும்
திருஞானம் இவையெலாங் கடந்தசிவ ஞானம்
ஆதலாற் **சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்**."

எல்லாவிடத்திலும் சிவன் நிறைந்திருக்கிறான். எந்த இடமும் சிவனை நீங்கியில்லை. அவ்வாறே சிவமாம் தன்மை பெற்ற அணைந்தோரும் எங்கும் இருக்கிறார்கள். உடம்போடு உள்ள சீவன் முத்தி நிலையில், சீவ கரணங்கள் சிவ கரணங்களாக மாறி, அவர்க்கு வியாபக உணர்வையே தந்து நிற்கும். அவ்வியாபக உணர்வினால் எல்லாவற்றிலும் சிவத்தையே காண்பார். "எல்லாம் சிவனென நின்றாய் போற்றி" என்ற அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகமும் இதனையே குறிப்பிடுகின்றது.

"சிவன்முதலே அன்றி முதலில்லை என்றும்
சிவனுடைய தென்னறிவ தென்றும் - சிவனவன(து)
என்செயல தாகின்ற தென்றும் இவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான். (64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற திருக்களிற்றுப்படியார் பாடல் சிவனுடைய இச்சையன்றி நமக்கிச்சையில்லை யென்றும் சிவனுடைய அறிவன்றி நமக்கறிவில்லை யென்றும் சிவனுடைய கிரியையன்றி நமக்குக் கிரியையில்லையென்றும் அணைந்தோர் நிலைபற்றி கூறுகிறது.

அணைந்தோர் எந்நிலையிலும் சிவனை அறிவில் உணர்ந்தே நிற்பார். "வாழினும் சாவினும் வருந்தினும் போய் வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்" என்ற உறுதியோடு இருப்பர். பரமுத்தி அடைந்தோர் உடம்பு நீங்கியபின் பெறும் இன்பத்தை, சிவானந்த நிலையை சீவன் முத்தர் உடம்போடு நின்றே பெறுகின்றனர். அந்நிலையில் திளைத்திருந்த மாணிக்கவாசக சுவாமிகள் பின்வருமாறு பாடுகின்றார்,

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து." திருவாசகம் - திருவெண்பா(11)

திருமூலர் தான் அனுபவித்த சிவானந்த நிலையை திருமந்திரத்தில் பின்வருமாறு பாடுகின்றார்.

"பணிந்து நின்றேன் பரமாதி பதியைத்
துணிந்து நின்றேன் இனி மற்று ஒன்றும் வேண்டேன்
அணிந்து நின்றேன் உடல் ஆதிப் பிரானைத்
தணிந்து நின்றேன் சிவன் தன்மை கண்டேனே." (2972)

சிவந்த தாமரை மலர் போன்று விளங்குபவையும், அடியார்களைத் தாங்கி நிற்கும் வல்லமை வாய்ந்தவையும் ஆன திருவடிகளை கணப்போதும் மறவாமல், சிவபெருமானிடத்தே அயரா அன்பு செய்தும், மெய்ஞ்ஞானியர்களின் திருவேடமாகிய திருநீறு, உருத்திராக்கம் ஆகியவற்றையும் சிவாலயத்தையும் சிவன் எனவே கண்டு வழிபட்டும் வருபவர் அணைந்தோர் என சிவஞானபோத பன்னிரண்டாம் சூத்திரம் கூறுகிறது. இந்நிலையை நாம் அடைவது எப்படி என்று திருநாவுக்கரசு நாயனார் பின்வருமாறு கூறுகிறார்.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகில் சிவகதி விளையும் அன்றே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணத் தொடர்...

சிவமயம்

# எறிபத்த நாயனார்

சித்தாந்தரத்தினம் பத்மினி இராஜேந்திரா

கொங்கு நாட்டிலே, இராஜதானியாக விளங்கியது கருவூர் ஆகும். சோழமன்னர்களாகிய கரிகாற்சோழன் முதல் அநபாயச்சோழன்வரை தலைநகராகக் கொண்ட பெருமையுடையது.

கருவூரிலே திருஆனிலை என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனை வழிபடுகின்றவரும், சிவன் அடியவர்க்குத் தொண்டு செய்பவரும், சிவனடியயவர்கட்கு ஒரு போதும் இடர் விளையாவண்ணம் அவர்களைக் காத்தற்பொருட்டு, சிவனின் மழுவாயுதத்தைப்போல, தானும் பரசு எனும் ஆயுதத்தினால் வெட்டுகின்றவராகிய எறிபத்த நாயனார் என்பவர் இருந்தார்.

"**அழல் அவிர் சடையான் அன்பர்க்கு ஆடாதன அடுத்தபோது
முழையரி என்னத்தோன்றி முரண்கெட எறிந்து தீர்க்கும்
பழமறை பரசுந் தூயபரசு முன் எடுக்கப் பெற்றார்**." (சேக்கிழார் பெருமான்)

அவர் காலத்தில் சிவகாமியாண்டார் என்னும் ஒரு பெரியவர் தினந்தோறும், புஷ்பங்களைக் கொய்து பூமாலை கட்டி, ஆனிலையில் வீற்றிருக்கும் ஈசனுக்குச் சாத்திவந்தார். ஒருநாள் வழக்கம்போல திருநந்தவனத்தில் பூக்களையெடுத்து, பூக்கூடையை நிறைத்து, கையில் தண்டை ஏந்தி, பூமாலைகள் கட்டிச் சாத்தும் பொருட்டு, அந்த சிவாலயத்தை நோக்கிச் சீக்கிரம் நடந்தார். அப்போது, சோழ மன்னனின் 'பட்டவர்த்தனம்' என்னும் யானையானது, காவேரியில் முழுகி மிகவும் அலங்கரிக்கப்பட்ட தன்மேலேறிய பாகர்களுடன் விரைவாகச் சென்று, தனக்கு முன் செல்லும் சிவகாமியாண்டாரைப் பின் தொடர்ந்தோடி, அவர் கையில் தாங்கிய தண்டிலே தொங்குகின்ற பூக்கூடையைப் பறித்துச் சிந்தியது. பதறிய சிகாமியாண்டார் கால்தவறிக் கீழேவிழுந்தார். அவர் துக்கங்கொண்டு "தேவரீருக்குச் சாத்தும்படி கொண்டுவந்த பூக்களை யானை சிந்திவிட்டதே! இறைவா என்ன சோதனை"? எனக் கதறியழுதார்.

இந்நேரம் அவ்வழியே வந்த எறிபத்த நாயனார், சிவகாமியாண்டாருடைய நிலைகண்டு பதறி, வீராவேசத்துடன் ஓடி மதயானையை நெருங்கி, தனது மழுப்படையைப் பலமாக வீசி அதன் துதிக்கையை வெட்டித் துண்டாக்கினார். கை துண்டிக்கப்பட்ட யானை துடித்து ஓலமிட்டு தரையில் வீழ்ந்து மாண்டது. யானையை அடக்காமல் வந்த குற்றத்திற்காக மூன்று யானைப்பாகர்களையும் வெட்டிக் கொன்றொழித்தார். வாயிற் காவலர்கள் அரசனிடத்தில் போய் நடந்தவற்றைக் கூறினர்.

மன்னன் அதிர்ச்சியடைந்து, பகைவர்களே இல்லாத தன் நாட்டில் இப்படி ஒரு கலவரம் எப்படி? பட்டத்து யானையையும், பாகர்களையும் ஒருவர் வெட்டிக்கொல்வதா? அளவற்ற கோபத்துடன் மன்னன், யானையும் பாகர்களும் இறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களத்தையடைந்து, அங்கே நின்ற சிவவேடந் தரித்த எறிபத்த நாயனாரை மாத்திரங்கண்டு, "யானையைக் கொன்றவர் யாவர்" எனக் கேட்டார். காவலர்கள், மன்னனிடம் "மழுவைத் தரித்துக்கொண்டு இவ்விடத்தில் நிற்பவரே யானையைக் கொன்றவர்" என்றார்கள்.

மன்னன் மறுத்தான். "இவர் சிவபக்தராகையால், அந்த யானை குற்றஞ்செய்தாலன்றி அதைக் கொல்லார். அது யாதோ குற்றஞ் செய்தது போலும்" இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது. விசாரித்து அறிவோம்.

எறிபத்தர் முன் போய்நின்றார். "அடிகளே நடந்தற்றைக் கூறியருளுங்கள். தங்களுக்கு ஏற்பட்ட துன்பத்திற்கு இந்த யானையைக் கொன்றது போதுமா? அல்லது இன்னும் செய்வதற்கு வேறு உண்டோ!" என்றார் பணிவாக.

"சோழமன்னரே! சிவகாமியாண்டார் சுவாமிக்குச் சாத்துவதற்காக கொண்டுவந்த பூக்கூடையை இந்த யானை பறித்துச் சிந்தியதால், நான் இதைக் கொன்றேன். யானை தீங்கு செய்தபோது, பாகர்களும் அதை விலக்காத படியால் அவர்களையும் கொன்றேன். இதுவே இங்கு நிகழ்ந்த சமாசாரம்" என்றார் எறிபத்த நாயனார்.

நீதி வழுவாத மன்னன் நிகழ்ந்த வற்றைப் புரிந்து கொண்டான். யானை செய்த தவறுக்கு நீங்கள் செய்த பரிகாரம் போதாது. இத்தவறில் மன்னனாகிய எனக்கும் பங்குண்டு. எனவே என்னையும் கொன்றாக வேண்டும். அதற்கு எனது வாளே உரியதாகும். எனக்கூறி, தனது உடைவாளை எடுத்து எறிபத்தரிடம் நீட்டினார்.

மன்னன் நீட்டிய வாளைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் தன்னைத்தானே மன்னன் மாய்த்துக்கொள்வார் என அஞ்சி, எறிபத்த நாயனார் அதனை வாங்கினார். வாங்கிய எறிபத்த நாயனாரை மன்னன் வணங்கி, நின்று, "சிவபக்தராகியதாங்கள் என்னை வாளினாலே கொன்று என் குற்றத்தை தீர்த்துவிடும்படி மன்றாடுகிறேன்" என்றார்.

மன்னனுடைய பெருந்தன்மையையும், அன்புள்ளத்தையும் கண்ட எறிபத்தர் தானே தனது வாளால் தன்னைக் கொல்ல விழைந்தார்.

அப்பொழுது வானிலே ஒரு அசரீரி ஒலித்தது. "எல்லையற்ற பக்தியும், அன்பும் கொண்ட அன்பரே! உமது திருத் தொண்டின் மகிமையை உலகத்தவர்க்கு அறியத்தரவே, புனித மலர்க்கூடையையும், பூக்களையும் சிதைக்கும் வண்ணம் யானையைச் செயலாற்ற வைத்தேன்." இவ் அசரீரியைக் கேட்டு சகலரும் அதிசயித்தனர். இறந்து கிடந்த யானை தானாகவே எழுந்து அடியாரைத் தொழுது நின்றது. பாகர்களும் உயிர் பெற்றெழுந்தனர்.

மன்னன் எறிபத்த நாயனாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். இறையருளால் பூக்கூடை நிரம்பிய மலர்மாலைகள் சிவகாமியாண்டார் திருக்கரங்களுக்குக் கிடைத்தது. சிவகாமியாண்டார் அதனைக்கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிபத்தநாயனார், புகழ்ச்சோழ மன்னனை அஞ்சலிசெய்து, "அடியேன் மகிழும்படி இந்த யானையின்மேல் ஏறிச் செல்லும்" என்று விண்ணப்பம் செய்ய, மன்னன் அவரை வணங்கி யானையின் மேலேறித் தனது சேனைகளுடன் மாளிகையை அடைந்தார். சிவகாமியாண்டார் திருப்பூக்கூடையை எடுத்துக்கொண்டு இறைவனுக்கு மாலை கட்டுவதற்குப் போனார். எறிபத்தநாயனாரும் சிவன் அடியவர்கட்கு எங்கும், என்றும் இடையூறு ஏற்படாதவண்ணம், தொண்டுகள் புரிந்து, பின்பு சிவகணங்கட்கு எல்லாம் தலைவராகும் பெரும் பேற்றினைப் பெற்றார்.

"இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கடியேன்."

உ
சிவமயம்

# இரு இராசாக்கள்

ஒருவர் நின்றாடும் ராசா. அவர் நடராசர். மற்றவர் அமர்ந்தாடும் ராசா. அவர் தியாகராசர். நடராசர் கோயில் பொற்கோயில், தியாகராசர் கோயில் பூங்கோயில். நடராசர் எழுந்தருளியுள்ள கோயில்கள் பஞ்சசபைத்தலங்கள், தியாகராசர் எழுந்தருளியுள்ள கோயில்கள் சப்தவிடங்கத் தலங்கள். நடராசர் நடனம் ஆடிக்கொண்டு இருக்கிறார். தியாகராசர் திருமால் மார்பில் இருந்து ஆடிக்கொண்டு இருக்கிறார்.

இருவரும் திருவாதிரை விழாக் காண்பவர்கள். சிதம்பரத்தில் திருவாதிரை விழா சிறப்பாக நடைபெறுவது போலத், திருவாரூரிலும் திருவாதிரை விழா சிறப்பாக நடைபெறும். அப்பரடிகள் திருவாரூர் திருவிழாச் சிறப்பை "முத்துவிதானம்" என்ற திருப்பதிகம் மூலம் காட்டியுள்ளார்.

இருவரும் தேரில் மட்டுமே பவனிவரும் தேரூர்ந்த செல்வர். திருவாரூர்ப்பெருமான் புற்றிடங்கொண்டார்; மண்வடிவினர். தில்லைப்பிரான் ஆகாயவடிவினன். மண்ணாகி விண்ணாகி அருள் புரிகின்றனர்.

தில்லையில் "சிதம்பரரகசியம்", திருவாரூரில் "சோமகுலரகசியம்". தில்லையில் ஆனந்தநடனம், திருவாரூரில் அஜபாநடனம். தில்லையில் கூத்தபிரானின் எடுத்த பொற்பாதமாகிய இடது திருவடித் தரிசனம். மார்கழித்திருவாதிரையில் தரிசிக்கலாம். பங்குனி உத்திரத்தன்று தியாகராசர் வலது திருவடியைத் தரிசனம் செய்யலாம்.

தீதிலாத் திருத்தொண்டர் பாடச் சுந்தரருக்குத் "தில்லை வாழ்அந்தணர்" என்று அடியெடுத்துக் கொடுத்தார் தியாகராசர். திருத்தொண்டர் பாடச் சேக்கிழாருக்கு "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்தார் நடராசர். தில்லையிலும் திருவாரூரிலும் மூலவர் "மூலட்டானேசுவரர்" எனப்பெயர் பெறுவர்.

நன்றி - சைவநீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சென்ற இதழின் தொடர்ச்சி...

உ
சிவமயம்

# முதலாவது மலேசிய ஆன்மிகப் பயனணம்

சித்தாந்தரத்தினம், சைவப்புலவர். செல்வி. கி. வீரசிங்கம். (ஓய்வுநிலை அதிபர்)

இரண்டாம் நாள் 15.12.2018 சனிக்கிழமை. இல.3 ஜலான் தெபிஸ் லோரோஸ் கொற் (Jalan Scott - Kualalumpor) ல் அமைந்துள்ள ஸ்ரீ கந்தசுவாமி கோவிலைத் தரிசிக்கச் சென்றோம்.



மூலமூர்த்தியாக ஸ்ரீ சக்தி வேல் பெருமான் 1902இல் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயிலாகும். மூலஸ்தானத்தில் வேலைத் தரிசித்தபோது நல்லூர் முருகன் கோவில் ஞாபகம் மனதில் ஒருமுறை பளிச்சிட்டது. சக்தி வேல் அங்கு மூலமூர்த்தியாக இருந்தாலும் சண்முகப் பெருமான் ராஜமூர்த்தியாகப் பெருமையோடு திகழ்வதாகக் கூறப்பட்து.

இக் கோவிலின் முதல் கும்பாபிஷேகம் 1909இல் நடைபெற்றது. ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீசண்முகப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்ட 90ஆவது ஆண்டுவிழா 2017இல் கொண்டாடப்பட்டு, மலர் வெளியீடும் செய்யப்பட்டது.

நமது நாட்டுக்கும் அக்கோவிலுக்கும் நிறைய உறவுத் தொடர்பு இருப்பது அறிந்து மகிழ்வடைந்தோம். நித்திய நைமித்திய பூசைகளுடன், பல கும்பாபிஷேகங்கள், மகோற்சவ விழாக்கள், கந்தசஷ்டிப் பெருவிழா உட்பட பல விழாக்களைக் காணும் சிறப்புடையதாக விளங்கியதுடன், அங்குள்ள பிரதம சிவாசாரியார் ஸ்ரீ சபாரத்தின பரமேஸ்வரக் குருக்கள் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவராகும். உரும்பிராய் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் ஆதீனகர்த்தா பரம்பரையினராகும்.

எமது சிரேஷ்ட போதனாசிரியர் கலாபூஷணம் செல்லத்துரை ஐயா அவர்களுடன் அறிமுகமாகி, பூசைகள் நிறைவுற்ற பின்னர் எம்மை கோவிலருகில் அமைந்திருந்த தமது இல்லத்திற்கு வரும்படி கூப்பிட்டு உபசரித்த பாங்கு, எமது எல்லோருக்கும் ஆனந்தமாகவும், ஆசீர்வாதமாகவும் அமைந்து திருப்தியைத் தந்தது.

அதுமட்டுமல்ல மலேசிய இலங்கைச் சைவர் சங்கம் என்ற பெயருடன் கோவில் நிருவாக சபை இயங்கிவருவதும் பெருமைக்குரிய விடயமென்றே கூறவேண்டும்.



கோவில் பூசையில் கலந்து கொண்ட அடியார்கள் கூட மிகப் பக்தி, பணிவு உணர்வுடன், ஒழுங்கு கட்டுப்பாட்டு உணர்வுடன் அங்கு கலந்துகொண்ட காட்சியானது, எமது ஊர்க்கோவில்களில் சில சந்தர்ப்பங்களில் அடியார்களின் நடத்தைகளுடன் ஒப்பிட்டு நினைக்க வைத்த நிகழ்வாகும். ஆலயம் அழகாகவும், தூய்மையாகவும், மிகச் சுத்தமாகவும் விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் வளவுக்குள் நந்தவனத்தையும் அதற்குள் அழகிய தடாகத்தையும் கண்டு களிப்புறலாம். கோவிலருகில் கலாமண்டபம் ஒன்றுண்டு.

இவ்வாறு கந்தசுவாமி கோவில் தரிசனத்தை முடித்துக்கொண்டு புறப்பட்ட நாம் எமது இருப்பிடத்தை அடைந்து, மதியபோசனத்தை (Chat Masala) சட் மசாலாவில் முடித்துக் கொண்டோம். சிலர் தங்கும் அறையில் ஓய்வு எடுத்தனர். சிலர் கடைத் தெருக்களைப் பார்க்கப் பொருட்களை வாங்க வெளிச்சென்றனர். பிற்பகல் 3.30 மணிக்கு வழமையான வாகனம் வந்து எம்மை ஏற்றிச் சென்றது. அன்று சனிக்கிழமையாதலால் 4.00 - 7.00 மணிவரை புராணபடனம் இடைவேளையுடன் நடந்து நிறைவுற இரவுப் போசனத்தை முடித்துக் கொண்டு திரும்பினோம். மின்சார ஒளியில் வாகனசாரதி கோலாலம்பூர் நகர அழகை எமக்குச் சுற்றிக்காண்பித்தார். அன்று மழை பெய்து கொண்டிருந்ததால், நாம் வாகனத்திலிருந்து இறங்கி சுற்றுவதைக் கூடியளவில் தவிர்த்து, வாகனத்திலிருந்தே பெரும்பாலான பகுதியைப் பார்வையிட்டோம். "Twin Tower" எனப்படும் இரட்டைக் கோபுரத்தைக் கண்டவுடன் ஆர்வமுடன் இறங்கிச் சென்று அதன் அழகைத் தமது ஒளிப்படக்கருவிக்குள் பலரும் மாறிமாறிப் படம் பிடித்து அடக்கிக்கொண்டு இரசித்தனர்.

அத்துடன் எமது வாகன சாரதி நிரந்தரமான ஒருவராக இருக்கவில்லை. அதற்குக் காரணம் சாரதியாக வந்தவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரராக அல்லது உறவினராக இருந்தனர். அவர்கள் எல்லோரும் நிரந்தரமாக ஒவ்வோரிடத்தில் தொழில் பார்ப்பவர்கள். தமது லீவு வசதிகளின்படி தமக்கிடையே நேரசூசிகையிட்டு எமக்கு சேவை வழங்கி எம்மை மகிழ்வித்ததையும் குறிப்பிட வேண்டும். அந்த வகையில் மோகன், ரவி, புவனேஸ், ரகு என அடுக்கடுக்காக பல சாரதிகளின் அறிமுகமும் நட்பும் நமக்குக் கிடைத்தது. மிக அன்பாகவும், பண்பாகவும் அவர்கள் எம்மை ஒவ்வொரு இடங்களிலும் ஏற்றி இறக்கி, தமது குடும்ப உறுப்பினர்களைப் பராமரிப்பது போல எம்மைக் கவனித்துக் கொண்டதையும் இங்கு குறிப்பிடவேண்டும். வேண்டிய நேரங்களிலும், பயண நேரங்களிலும் கடைத் தெருக்களில் ஏற்றி இறக்கியும் வழிகாட்டிகளாக உதவினர். அதுமட்டுமல்ல இவர்களில் சிலர் புராணபடனங்களின்போது, தமக்கு நேரமுள்ள காலங்களில் வருகை தந்து, புராணமும் பக்தியுடன் ஓதியுள்ளனர். அருள்நெறி திருக்கூட்டத்தினரதும், எமது இயக்குநரதும் அனுசரணையே எமக்கு இப்படியான வாய்ப்புக்களைப் பெற்றுத்தந்தது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.



கோலாலம்பூர் சுவாத்தியநிலை ஏறத்தாழ கொழும்பு நிலையை ஒத்தது. பகலில் வெயிலும், மாலையில் மழையும் நாம் அங்கிருந்த நாட்களில் காணக்கூடியதாக இருந்தது.

மூன்றாம் நாள் 16.12.2018 ஞாயிற்றுக்கிழமை. காலையில் பங்சார் (Bangsar) என்னுமிடத்திலுள்ள இராமலிங்கேஸ்வரர் கோயிலைத் தரிசித்தோம். அங்குள்ள இறைவி பர்வதவர்த்தினி என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாமத்துடன் காட்சியளித்தாள். அடக்கமான, அழகான கோயிலாகக் காட்சியளித்ததுடன் நவக்கிரக சந்நிதி அங்கு கோயிலுக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்தது. கோயில் மண்டபத்தின் ஒரு பகுதியில் சமயநெறிப் பயிற்சி வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்ததையும், ஆசிரியர் விளக்கம் வழங்க, பல மாணவர்கள் படித்துக் கொண்டிருந்த காட்சியையும் அங்கு கண்டோம். சமய நெறிகள் போற்றப்பட்டு, பயிற்சிகள் நடைபெறுவதை அறிந்து நாம் மகிழ்ச்சி அடைந்தோம்.

இதனைத் தொடர்ந்து, நாம் முதல்நாள் சென்ற கந்தசுவாமி கோவிலுக்கு அருகிலுள்ள கலாமண்டபம் சென்றோம். எமது சிரேஷ்ட போதனாசிரியர் கலாபூஷணம், சைவப்புலவர் செல்லத்துரை அவர்களின் ஆறுமுகநாவலர் பற்றிய சிறப்புச் சொற்பொழிவு ஒன்று நடைபெற ஏற்பாடாகியிருந்தது. நாவலர் விழாவில் முதலில் நாவலர் பெருமான் பற்றிய சிறுவர்களின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவு இடம் பெற்றது.

விழா முடிவில் எல்லோரும் கந்தசுவாமி கோவில் போய் மதிய நேரம் நடைபெற்ற பூசையில் கலந்து கொண்டோம். பூசை முடிந்த பின்னர் கலாமண்டபத்தில் எல்லோருக்கும் மதியபோசன உபசாரணை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நமது தங்குமிடம் சென்றோம்.

அன்று ஞாயிற்றுக்கிழமையானபடியால் பிற்பகல் 4.00 மணிக்கு புராணபடனம் ஆரம்பிக்க, நாம் அந்நிகழ்வில் கலந்து கொண்டு, இராப்போசன முடிவில் மீண்டும் எமது இருப்பிடத்தை அடைந்தோம்.

நான்காம் நாள் 17.12.2018 திங்கட்கிழமை. காலையில் செந்தூலிலுள்ள (Senthul) ஆதீஸ்வரன் கோவில் தரிசனத்திற்காகச் சென்றோம். இறைவி ஆதீஸ்வரி என்னும் நாமத்துடன் திருக்கோலம் கொண்டுள்ளார். இலங்கை, இந்திய, மலேசிய, சிங்கப்பூர் தமிழர்கள் நீண்ட காலமாக வழிபட்டுவரும் திருத்தலம் இதுவாகும்.



டாக்டர் விஸ்வலிங்கம் என்னும் அடியாரின் பெருமுயற்சியால், கோயில் நிலம் சிலாங்கூர் அரசாங்கத்தின் ஒப்புதலுடன் வாங்கப்பட்டு அடிக்கல் நாட்டுவிழா 1937இல் நடைபெற்றது. 2ஆம் உலகப் போர்ச் சூழ்நிலை காரணமாக, கும்பாபிஷேகம் பின்தள்ளப்பட்டு முதல் மகாகும்பாபிஷேகம் 1947இல் நடைபெற்றது.

றெயில்வே விடுதிக்கருகில் இருக்கும் இக்கோவிலை றெயில்வேக்காரர்கள் அனுசரணையுடன் பேணுவதில் ஆர்வமாக உள்ளனர். சிவன் மட்டுமே ஆரம்பத்தில் பிரதிட்டை செய்யப்பட்டார். மற்றைய பரிவார மூர்த்திகள் அதன் பின்னரே பிற்காலங்களில் வைக்கப்பட்டனர். கோயில் மற்றும் அதன் அனைத்துச் சொத்துக்களும், அரசாங்கத்தின் தலையீடின்றி, அறங்காவலர்கட்கு வழங்கப்பட்டுள்ளன. கோயிலின் நுழைவாயிலில் இராஜகோபுரம் கம்பீரமாகத் தோற்றம் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலின் 2ஆம் கும்பாபிஷேகம் 1986இலும், 3ஆம் கும்பாபிஷேகம் 2004இலும், 4ஆம் கும்பாபிஷேகம் 2017இலும் நடைபெற்றுள்ளது. 36 தத்துவங்களையும் கடந்து உள்ளிருப்பவன் இறைவன் என்ற தத்துவத்திற்கேற்ப 32 தூண்கள் மண்டபத்தை தாங்கிநிற்கும் வகையிலும், 2ஆவது மத்தியில் நான்கு வாயில்களும் (கிழக்குவாயில் தவிர ஏனையன மூடப்பட்டுள்ளன) அமைக்கப் பெற்றுள்ளமை இக் கோயிலின் தனிச் சிறப்பு என அவர்களால் எடுத்துக் கூறப்பட்டது. இது சைவசித்தாந்த கோயில் என்ற பெருமை பெறுகிறது.

இங்கு நடைபெறும் பிரதோஷ வழிபாடும், ஆனி உத்தரவிழாவும் பக்தர்களைப் பரவசப்படுத்தும் வழிபாடுகளாகக் கூறப்படுகிறன. அதைவிட அமாவாசை, நவராத்திரி, திருவெம்பாவை என்பனவும் சிறப்புக்குரிய பூசைகள் இடம்பெறும் நிகழ்வுகளாகக் கருதப்படுகின்றன.

காசியைப் போலவே, ஆதீஸ்வரன் கோவிலும் மயானத்தில் அமைந்திருக்கும் ஒரு புண்ணிய தலமாக உள்ளது எனக் கூறிக்கொள்கின்றார்கள். சைவக் குருக்களே இங்கு பூசை செய்கின்றார்கள்.

கோவிலில் காலைப் பிரசாதத்தைப் பெற்று மகிழ்ந்து, அடுத்ததாக, செந்தூல் கிழக்கிலுள்ள (Sentul East) நாட்டுக் கோட்டைச் செட்டிமாரின் தண்டாயுதபாணி கோவிலுக்குச் சென்றோம்.



கோவில் வாசலுடன் கூடிய சிறிய நந்தவனப் பகுதியில் பல மயில்களைப் பார்த்தது கண்கொளாக் காட்சியாக அமைந்திருந்தது. சிறிய கோயிலமைப்பில் தண்டாயுதபாணி கம்பீரமாகக் காட்சியளித்தார்.

பங்குனி உத்தரம், சோமவாரம், கந்தசஷ்டி இக் கோயிலில் விசேட வழிபாடுகள் விழாக்கள் நடைபெறும் நிகழ்வுகளாகும். இதனைவிட மாதாந்தம் கார்த்திகை வழிபாடும் விசேடமானதாகும்.

கோயில் தேர் வெள்ளோட்டம் முதன்முதல் 1924இல் நடைபெற்றதாக அறிகிறோம். புதுப்பித்த வெள்ளித் தேர் 2009இல் திருவிழாவாக நடைபெற்றது என்ற தகவலும் கிடைத்தது.

எமது தங்குமிடத்திற்கு திரும்பியதும் மதியபோசனத்திற்கு ஆயத்தமானோம். மதிய போசனத்திற்காக "சட்மசாலா" சென்ற எம்மை இலங்கையைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவர் சந்தித்து, தானே விரும்பி முன்வந்து எமக்கு மதிய போசனவிருந்தை வழங்கி மகிழ்ந்து நின்றார். எமது நன்றியைக் கூறி விடைபெற்றோம். அன்று மாலையும் வழமைபோல புராணபடன நிகழ்விற்குச் சென்று திரும்பினோம்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# எதிரது தழீஇய சிந்தனை வேண்டும்

முருகவே பரமநாதன்

உலகளாவிய போக்கில் மக்கட்சமுதாயம் எவ்வளவோ மாற்றங்கண்டுளது. நெருங்கிய உலகம் மிகமிகச் சுருங்கிவிட்டது. காரணம் கொம்பியூட்டர்யுகம் இது. விஞ்ஞானக் கண்ணோட்டத்திலேதான் இன்றையக் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதுமை நோக்கிற் பழைமைக்கே இடமில்லை. எனவே சிந்தனைகள்யாவும் எதிர்காலப் பார்வையுடையன. இலக்கியங்கள்கூட அக்கணிப்பீட்டுடன் ஆய்வுசெய்யப்படும் தரவுகளும் அப்படியே எதிர்பார்க்கப்படும். இப்படியான சூழ்நிலையிற் சமுதாயப் பார்வை மாற்றம் கண்டுள்ளது. அதற்கு வரவேற்பும் அதிகம். இப்போக்கிலே மனிதசமுதாயமும், அதன் நடைமுறைச் சித்தாந்தங்களும் மேற்கிற் புத்துணர்வு பெற்றுள்ளன. இந்த நிலை நெருங்கிய உறவு கொண்ட கிழக்கிலும் வந்துவிட்டது. மின்னஞ்சலும், இணையதளமும் இதன் ஊடகங்கள். மக்கட் சமுதாயத்தோடு இணைந்துள்ள சமயமும், நிலைப்பாடும், வழிநடத்துகையும் வெகுதூரம் மாற்றம் கண்டுள்ளன. காரணம் வெகுசன தொடர்புச் சாதனங்களே. இந்நெறியிற் சைவசமயம் எதைச் சாதித்துவிட்டது? பின்னடைவும், சரிவும் கண்டுள்ளது என்றே கூறவேண்டும். இந்த நிலை தொடரின் சைவம் தன் நிலையிற் பெலவீனம்காணும்.

இப்பவே ஆட்டம் கண்ட மாதிரிதான். இப்படிக் கூறின் சிலர் எதிர்க்கலாம், ஏற்க மறுக்கலாம். உண்மை நிலையை யதார்த்தமாய் அறிந்தோர் "ததாஸ்" சொல்லாமல் இருக்கமுடியாது. நாவலர் என்ற தனி மனித ஆளுமை நமக்குக் கிடைக்காவிடின் நச்சு நாமத்துக்கும் சைவம் என்ற சமயப்பாங்கு வழக்கொழிய, கிறீஸ்தவப் பரம்பல் யாழ்ப்பாணத்தை கபளீகரம் செய்திருக்கும். இப்படி யெழுதுவது கசப்பாய் இருக்கும் பலருக்கு. எனினும் இன்றைய நிலைமையை ஊர்ஊராகச் சென்று பார்த்தால் புரியும். சம்பந்தர் காலத்தையண்டிய காலகட்டத்திற் பௌத்த, சமண ஆதிக்கம் வலுப்பெற்றிருந்தது போல இன்று கிறீஸ்தவத் தாக்கம் சுடர் விட்டுப் பிரகாசிக்கக் காணலாம். கிராமந்தோறும் வீடுகளிலும், புதிய மண்டபங்களிலும், கொட்டகைகளிலும் கிறீஸ்தவத்தின் பலபிரிவுகள் நிலைகொண்டு தம்யந்திரத்தை முடுக்கிவிட்டுள்ளன. அதனாற் சைவம் மெல்ல மெல்லச் சரிகின்றது. எனவே சைவம் பேசும் சதுரர்கள் எதிர்காலம் பற்றியும், எதிர்காலச் சமுதாயம் பற்றியும் சிறிது சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இந்த ஞானதீட்சண்யம் எதிர்காலக் காப்புக்குத் திட்டம் தீட்டி அதை நடைமுறைப் படுத்தி இளஞ்சந்ததியினர் சமயம் மாறாமல் ஆவன செய்ய வேண்டும். யுத்தகாலக் கெடுபிடியையும், பல்வேறு நெருக்கீடுகளையும், இழப்பையும் பயன்படுத்தி உதவியென்ற பெயரில் ஊடுருவல் செய்யப்பட்டுள்ளமை யதார்த்தம்.

சைவம் தன்கையாலாகாத்தனத்தால் அகதிகளின், அநாதைகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவில்லை. பெரும்பணவசதி படைத்தவர், வெளிநாட்டு உதவியுள்ளவர்கள், பணக்கார ஆலயங்கள் என்ன செய்துவிட்டன? தம் கஜானாக்களை நிரப்புகின்றன. புதியபுதிய உத்திகளைக் கையாண்டு உண்டியலை நிறைப்பதையே இலட்சியமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றன. அர்ச்சனை, அபிஷேகம், உற்சவம் எல்லாவற்றின் ஏற்றம் விஷம் போல் ஏறிவிட்டது. கலியாணவீடு, நினைவேடு, பிறந்தநாட்கொண்டாட்டம், ருதுசோபனம் போன்றவற்றிற்குக் கொட்டும் பணத்தில் ஒருவீதம் போதுமே அநாதைகளைப் பேண. உறவிழந்தோர், உறுப்பிழந்தோர், கல்வியிழந்தோர் பற்றிச் சிந்திப்போர் பூச்சியந்தான். இன்றும் நல்லூரில் அர்ச்சனைச் சீட்டு ஒரு ரூபாதான். பாடசாலைகள் மரநிழலிலே, கொட்டில்களிலே நடக்க ஆலயங்களில் இராசகோபுரம் கட்டியென்ன பயன்கண்டது சைவம்? கதிரை, மேசை, கரும்பலகைப் பஞ்சம் நிறைய நம் மண்ணிலே இருக்க அன்னதானம் செய்வது பேருக்கும், புகழுக்குமே. இப்படியான கருத்துக்களைச் **சைவநீதி** முன்வைத்து தன் இலட்சியப் பாதையை மேற்கொள்வதும் **எதிரது தழீஇய செயற்பாடா**கும்.

சிவனையே முழுமுதற் தெய்வமாகக் கொண்டது சைவம். பிரம்மகுமாரிகளின் சிந்தனைப்படி, சிவன் இக்கலியுகத்தில் **அவதாரமெடுத்து** ஆண்டுகள் அறுபத்தியேழு ஆகின்றன. எனவே இச்சிவராத்திரி **67ஆவது தினமாகுமென்று பிரமகுமாரிகள் இராஜயோகதாபனம்** சொல்லுமளவுக்கு நம்சைவ சமயிகள் வெவ்வேறு கோட்பாடுகளை ஏற்பதன் மூலம் சைவசமயத்தைக் கைகழுவவும் செய்கிறார்கள். இதுவும் நம் சமயத்துக்குப் பெலவீனம்தான்.

சைவசமயப் பாடநூலிலே அறிமுகம் செய்யப்படும் ஏனைய சமயப் பெரியார்களான நபிநாயகம், இயேசுநாதர், புத்தரைப்போல நம் சமய குரவர்களைப் பற்றி பிறச் சமயத்தவர் எடுத்து எழுதியுள்ளனரா எனச் சமய உணர்வுள்ள பிள்ளை கேட்கத்தான் செய்யும். சமரசம் பேசின் எம்மதமும் சம்மதம் என்றுதானே பொருள். அப்படியாயின் மதம் மாறக்கூடாது என்றும் மதம் மாறுகிறார்களெனவும் மேடைகளிற் பேசியென்னலாபம்? இப்படியான போர்வை எதிர்காலக் குழந்தைகளின் சமயப்பிடிப்பை நிச்சயம் நலிவடையச்செய்யும். ஏன் மதம் மாறுகிறார்கள்? பொருளாதார வசதிக்காக என்பார். எனினும் சைவசமயப்போக்கும் நடைமுறையும் மக்களுக்கு வெறுப்பைத் தருவதாற் பலர் கிறீஸ்தவராய் இருக்கிறார்கள். இந்து நாகரிகம் என்றொரு துறை வந்து, கிறீஸ்தவர்களும், வேறு சமயத்தவரும் (அது படிப்பது சுலபம் ஆனபடியால்) அதைப்படித்து ஆசிரியர்களாகச் சேவையாற்றவும் காணலாம். இங்கே சமயப் பெறுமானம் சரிந்துவிட்டது. சைவசமயிகள் ஆசார உணவு உண்ணவேண்டும். இன்றைய சைவர்கள் ஆசாரசீலராய் இல்லை, புலால் உண்பவர்களாகவே காணப்படுகின்றனர். ஆலய நிர்வாகிகளே சைவசமய ஒழுக்கங்களைக் கைநழுவ விட்டுவிட்டனர்.

புலம்பெயர்ந்து குடியேறிய தேயங்களிலே கிறீஸ்தவ மதமாற்றங்கள் நிறைய நடக்கின்றன. அங்கேயுள்ள ஆலயங்கட்கோ அர்ச்சகர்க்கோ அதில் அக்கறையில்லை. அத்தகையவர்களின் கரிசனையாவும் ஆடம்பர வாழ்க்கைக்குப் பணம் சேகரிப்பதுதான். இவர்கள்கூட ஒழுக்க சீலராய், அறப் பண்புள்ளவர்களாய் வாழ்ந்து காட்டுவதில்லை. இவர்களை மக்கள் வெறுப்பதனால் சமயம் மாறிவிடுகின்றனர். **இந்து கலாசாரம் படித்தவர்கள் சைவசமயத்தைக் குழப்புகிறார்கள்**. **சைவசமயம் இந்துமதமாக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாற்றப்படுகிறது**. போகன்வில்லா என்ற கடதாசிப்பூவையும், எக்சோரா என்ற காட்டுப்பூவையும் சுவாமியை அலங்கரிக்கவும், சுவாமிக்குப் பூசைபண்ணவும் பயன்படுத்துவதும் **புஷ்பவிதிக்கு அடங்காத சிவத்துரோகமாகும்**. நாவலர் பெருமான் றோஜா மலரில் விருப்புடையவராய் இருந்தும் சிவபூசைக்கு அதை எடுப்பதில்லை. எனவே **இறைவனை அர்ச்சிக்கும் பூக்கள், பத்திரங்கள் சைவநீதிக்கு** உட்பட்டதாய் அமைதல் முக்கியமாகும். சைவஆசாரம், சமயாசாரம், சமூகாசாரம் தவறாமல் வாழ்பவரே சைவசமயிகள். இதைமக்கட்கு எடுத்துச் சொல்லத் தவறக்கூடாது சைவநீதி. பண்பாட்டுக் கலப்படம், கலாசாரப் பிறழ்வுகள் இன்றைய சைவர்களின் நெறிப்பாடாகவும் திகழ்கின்றன. சைவமும் சைவம் சார்ந்த சமுதாயமும் நல்ல நெறிமுறைகளை மேற்கொண்டொழுக சைவநெறி இன்றுவரை வழிகாட்டியாக இருந்தது.

ஈழத்தின் மூத்த சமயப்பத்திரிகையான சிவதொண்டன் உயர்ந்த சைவசமயப் பத்திரிகையாகும். யோகர் சுவாமிகளின் திருவாக்கில் அரும்பியது சிவதொண்டன். கடந்த பல ஆண்டுகளாக சைவம் பேணும் சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கிறது சைவநீதி. இன்னொன்று ஞானச்சுடர்; சந்நிதியான் ஆச்சிரமவெளியீடு. ஈழத்து மக்களிற் தமிழர்கைக்கொள்ளும் சமயம் சைவம். சைவநெறியிலே மக்களை வழிப்படுத்துவது சைவநீதி. இறைவனுக்கே சைவன் என்றும், நீதியென்றும் திருநாமங்களுண்டு. இம்மண்ணிலே மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் வாழும் மக்களின் கையேடாகத் திகழ்வதும் சைவநீதி. புத்தாண்டின் புதுமலராகவும், எண்பத்தொன்பதாம் வெளியீடாகவும் வெளிவரும் சைவநீதி எதிர்காலம் தழுவிய தெய்வச்சஞ்சிகையாக மிளிர எல்லாம்வல்ல சிவன் அருள்பாலிப்பானாக. எதிர்காலச் சிந்தனைக் கருவூலமாகத் திகழட்டும் சைவநீதி.

**எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை**
**அதிரவருவ தோர் நோய் - குறட்பா**
**ஒன்றுபரம் பொருள் நாமதன்மக்கள்**
**நீதிநெறி யினின்று பிறர்க்குதவும்**
**நேர்மையர் மேலோர், கீழவர் மற்றோர்**

- பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறட்கதை

உ
சிவமயம்

# தேய்ந்தது

**யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்.** திருக்குறள் - 345

**யான் என்னும் அகப்பற்றையும், எனது என்னும் புறப்பற்றையும் துறந்தவன், தேவர்க்கும் மேலான உலகை அடைவான்.**

இந்தத் தத்துவத்தை விளக்கும் சுகமான வரலாறு இது.

உலகத்திலே உள்ள பொருள்கள் தேய்ந்து விட்டால் அவைகள் பயனற்றவையாகிவிடும். தேய்ந்த ஆணி, தேய்ந்தமரை, தேய்ந்த முள் இவைகள் உபயோகப்படுவதில்லை. தேய்ந்தவைகளை எடுத்து அலட்சியமாகத் தூரத்தில் எறிந்துவிடுவார்கள்.

இந்த நியதிக்கு முற்றிலும் மாறாக - அதிசயமாக ஒரு பொருள் உண்டு. அது தேய்ந்தாரல்தான் உயர்வு பெறுகின்றது. இன்பம் விளைவிக்கின்றது. துன்பம் தொலைகின்றது. ஆ! ஆ! என்ன வியப்பு!

அவ்வண்ணந் தேயவேண்டிய பொருள் யாது? இதனை அறிய, அறிவுடையவர்க்குப் பெருவிருப்பந் தோன்றுவது இயல்பு. அது நியாயமுமாகும்.

நமது ஆன்மாவில் பன்னெடுங் காலமாக 'நான்' என்ற ஒரு தடிப்பு ஏற்பட்டிருக்கிறது. கர்வம் பிடித்தவனை உலகினர், "அவனுக்கு மண்டை வீங்கியிருக்கின்றது" என்று குறிப்பாகக் கூறுகின்றனர்.

நமக்கு வந்திருந்த - வந்து கொண்டிருக்கின்ற - வர இருக்கும் கேடுகள் அத்தனைக்கும் இந்த 'நான்' என்ற பெருந்தடிப்புதான் மூல காரணம்.

இந்த 'நான்' என்ற தலைக்கனத்தால் விளைகின்ற துன்பங்கள் ஒன்றா? இரண்டா? எண்ணத் தொலையாதன. அந்தோ! அநியாயம்.

'நான்' என்ற அகந்தையால் ஒருவரையொருவர் எதிர்த்துச் சொற்போர் புரிவொரும், மற்போர் புரிவோரும், நீதி மன்றங்கட்குச் சென்று வழக்காடித் தமது செல்வங்கள்யாவும் இழந்து வறுமையால் வாடித் தளர்ந்து துன்புறுவோரும் பலர்.

உயிரில் ஏற்பட்டிருக்கின்ற 'நான்' என்ற வீக்கம் தேய நல்ல தவம் பண்ணவேண்டும். அதனால், இந்த உடம்புந் தேயவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்த மாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த**
**செல்வமே சிவபெரு மானே."**

என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

தன்னைப்பற்றி மிகவும் உயர்வாக நினைக்கின்ற ஒரு தன்மை தொலைய வேண்டும். சிலர் தன் பேருக்கு முன்னும் பின்னும் பல அடைமொழிகளைச் சேர்க்கவே விரும்புகின்றார்கள். உண்மையான புகழ் இருக்குமானால் அவர்கட்கு அடைமொழிகள் தேவையில்லை. நல்ல, இனிய பதார்த்தங்களைச் சமைக்க பட்டை, லவங்கம், சோம்பு இவைகளையிட்டுத் துயருற வேண்டிய அவசியமில்லை. நல்ல கை என்றால் அதற்கு முன் பின் ஒன்றும் கட்டவேண்டாம். ஒடிந்த கைக்குப் பக்கங்களில் பலகை வைத்துக் கட்டுவார்கள். அதுபோல் பெருமை குறைந்தவர்க்குத்தான் பேருக்கு முன்பின் அடை மொழிகள் அமைக்கவேண்டும். உதாரணமாக, ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், நம்மாழ்வார், ஆண்டாள் இவர்களைக் குறித்துப் பேசுகின்ற போதும் எழுதுகின்ற போதும் உயர்திரு சம்பந்தர் , உயர்திரு அப்பர், உயர்திரு நம்மாழ்வார், திருமதி ஆண்டாள், திருமதி காரைக்காலம்மையார் என்று நாம் குறிப்பிடுவதில்லைதானே.

சுத்தமான ஆவின் பாலைக் காய்ச்சிப் பருகும்போது அதற்குச் சீனி போட வேண்டியதில்லை. தண்ணீர் நிரம்பக் கலந்த பால் என்றால் சீனி இல்லாமல் பருக முடியாது.

சுக முனிவர் ஒரு சமயம் பிரம்ம ஞானம் பெறவேண்டும் என்று கருதினார். மிதிலாபுரியை ஆளுகின்றவரும், இல்லற ஞான மூர்த்தியும், துறவினால் வணங்கத்தக்கவரும் ஆகிய ஜனக மன்னரை நாடி வந்தார். அரசவையின் காவலனை நோக்கிச் "சுகப் பிரம்ம மகரிஷி அவர்கள் வந்திருக்கின்றார் என்று ஜனக மகாராஜரிடம் தெரிவிப்பாய்" என்று கூறினார்.

காவலன் ஜனகரிடம் சென்று "மன்னரே! சுகப் பிரம்ம மகரிஷி அவர்கள் வந்திருக்கின்றார்" என்றான். ஜனகர் புன்முறுவல் செய்து, "காவலனே! அவருடன் வந்திருக்கும் நாலு ஐந்து ஆட்களை விட்டுவிட்டு வரச்சொல்" என்றார். காவலனுக்கு ஒன்றும் புரியவில்லை. "மன்னர் பெருமானே! அவர் மட்டும்தான் வந்திருக்கின்றார்" என்றான். "மூடனே! சொன்னதைச் சொன்னபடி சொல்" என்றர் வேந்தர்.

காவலன் சுகரிடம் வந்து, "சுவாமி! தங்களுடன் வந்துள்ள நான்கு ஐந்து பேர்களை விட்டுவிட்டுத் தங்களை மட்டும் வரச் சொன்னார்" என்றான். சுகருக்கு ஒன்றும் புரியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தார். ஒருத்தருமில்லை; சிறிது நேரஞ் சிந்தித்தார். தன் பேருக்குப் பின்வரும் அடைமொழிகள், 'சுகப்பிரம்ம மகரிஷி அவர்கள்" என்ற நீளத்தைக் குறைத்துச் 'சுகப்பிரம்ம ரிஷி வந்திருக்கின்றார் என்று கூறு" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலன் மன்னனிடம் போய் "சுகப்பிரம்ம ரிஷி வந்திருக்கிறார்" என்றான். ஜனகர் "இன்னும் இரண்டு மூன்று பேர் இருக்கிறார்கள்; அவர்களையும் அகற்றிவிட்டு வரச்சொல்" என்றார். அதனை அவன் சுகரிடம் சொன்னான். அவர் சிறிது சிந்தனை செய்து, "சுகப்பிரம்மம் வந்திருக்கின்றது என்று கூறு" என்றார்.

"சுகப்பிரம்மம் வந்திருக்கின்றது" என்றான் காவலன். ஜனகர், இன்னும் ஒருவர் இருக்கிறார். அவரையும் விடச் சொல்" என்றார் ஜனகர்.

காவலன் சுகரிடம் வந்து, "சுவாமி! இன்னும் ஒருவர் இருக்கிறாராம்; அவரையும் விடச்சொல்கின்றார் மன்னர்" என்றான். "அப்பா! சுகன் வந்திருக்கின்றான் என்று சொல்" என்றார். காவலன் மன்னனிடம் வந்து "சுகன் வந்திருக்கின்றான் என்று கூறினார்" என்றான். "உள்ளே அனுப்பு" என்றார்.

சுகரை காவலன் உள்ளே அனுப்பினான். சுகர் அரசவைக்குள் சென்று நின்றார். ஜனகர் சுகருக்கு நேரடியாக உபதேசிக்கவில்லை. அன்று மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவனை அழைத்து, "இன்று உனக்கு விதித்த மரண தண்டனையை நீக்கி விடுகின்றேன்; நான் சொன்னபடி செய்யவேண்டும்" என்றார். அவன் நடுங்கி ஒடுங்கி நின்றான்.

"உன் தலையை மொட்டையடித்து, மொட்டந்தலையில் ஒரு தட்டை வைத்து எண்ணெய் விடுவேன். இந்த ஊரை ஒருமுறை சுற்றி வரவேண்டும். ஒரு துளி எண்ணெய் கூடச் சிந்தக்கூடாது. அப்படி வந்தால் உன் மரண தண்டனை விலக்கப்பட்டதாகும்" என்றார் ஜனகர். அவன் அதற்கு இணங்கினான்.

மொட்டையடித்துத் தலையில் தட்டை வைத்து நிரம்ப எண்ணெய் விடுத்தார்கள். அவன் ஆடாமல் அசையாமல் வலம் வரலானான். இடையில் உயர்ந்த நடனக் கச்சேரி, இன்னிசைப்பாடல், வாணவெடிக்கை மனதைக் கவரக்கூடிய பற்பல அதிசயப் பொருள்கள் இவைகளை மன்னர் அமைத்தார். இவைகளை அவன் கண் காணவில்லை. அவன் எண்ணம் முழுவதும் எண்ணெய்த் தட்டிலே இருந்தது. எதிர்ப்பட்ட ஒன்றையும் அவன் அறியான். எண்ணெய் சிந்தாமல் வலம் வந்தான். அவன் எந்தக் காட்சியும் கண்டானில்லை. இனிய இசைகளைக் கேட்டானில்லை. கண்ணிருந்தும் குருடாய், காதிருந்தும் செவிடாய், தன் கருத்து முழுவதும் எண்ணெய் மீது வைத்து, உலகத்தை அறியாது வலம் வந்தான். மரணதண்டனையினின்றும் விடுதலை பெற்றுப் பிழைத்தேன் என்று மகிழ்ந்து, மன்னரை வணங்கிவிட்டுச் சென்றான்.

சுகர் இதனைக் கண்டார். இது போல், பரம்பொருளை நாடி உலகை உணராதிருத்தலே பிரம்மஞானம் என உணர்ந்து கானகஞ் சென்றார்.

ஆதலால் நம்மிடம் உள்ள 'நான்' என்ற கனம் தேய்தல் வேண்டும். அது தேயத் தேயத் திருவருள் வளரும். திருவருள் வளர்ந்து, ஆன்மா சிவத்துடன் ஒன்றும்; சிவானந்தம் எய்தும், இதோ பாருங்கள் இந்தத் திருவாசகத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்**
**தெழுகின்ற ஞாயிறே போன்று**
**நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்**
**நீயலாற் பிறிதுமற் றின்மை**
**சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்து தொன்றாந்**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**ஒன்றும்நீ யல்லை யன்றியொன் றில்லை**
**யார்உன்னை அறியகிற் பாரே.**

இப்பாடல் தேனினும் இனியது; ஆழ்கடலினும் ஆழமானது; அரிய பெரிய கருத்துக்ளையுடையது. சிந்தனைக்கு விருந்தாக விளங்குவது. இதனை ஓதிஓதி நம்மிடம் வெகு நாட்களாக வளர்ந்திருக்கின்ற "நான்" "நான்" என்ற கனந் தேய்தல் வேண்டும்.

இறைவனையன்றி ஒரு பொருளுமில்லை. அவனையன்றி ஒரு செயலுமில்லை. நம்மால் ஆவது ஒன்றுங்கிடையாது.

**"எல்லாம்உன் னடிமையே எல்லாம்உன் உடைமையே**
**எல்லாம்உன் னுடைய செயலே**
**எங்கணும் வியாபிநீ என்றுசொலும் இயல்பென்று**
**இருக்காதி வேதமெல் லாம்**
**சொல்லால் முழக்கியது"**

**"எல்லாம் சிவன்செயல் என்றறிந்தால் அவன் இன்னருளே**
**அல்லால் புகலிடம் வேறுமுண்டோ?"**

**எல்லாம் நினதுசெயல் என்றெண்ணும் எண்ணமும்நீ**
**அல்லால் எனக்குளதோ ஐயா பராபரமே.**

**எப்பொருளும் நீயெனவே எண்ணிநான் தோன்றாத**
**வைப்பைஅழி யாநிலையா வையாய் பராபரமே.**

தெய்வத்திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கோயில் அமைப்பு

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், சாமித்தம்பி பொன்னுத்துரை B.A.,M.A.
தர்மாசிரியர்

கோயில் என்பது இறைவன் எழுந்தருளி ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் இடமாகும். ஆலயம் என்பது ஆன்மாக்கள் இறைவனோடு ஒன்றி லயப்பட்டு அவனது அருட்பிரவாகத்தைப் பெற்றுக்கொள்ளும் இடமாகும். கோயில் என்ற சொல்லாடலும், ஆலயம் என்ற சொல்லாடலும் இறைவன் ஆன்மாக்களின் பக்குவநிலைக் கேற்ப தனது சாந்நித்தியத்தை ஆன்மாக்களுக்கு பாய்ச்சும் இடம் எனக் கொள்ளப்படுகின்றது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

என்ற திருமொழிகள் ஆன்மாக்கள் உய்திபெற உதவும் திருநிலையங்களாகக் கோயில்களை மகிமைப்படுத்துகின்றன.

கோயில் கட்டிட அமைப்பு, சிற்பம், திருவுருவப் பிரதிமாலட்சணங்கள், பற்றி ஆகமங்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றன. சிற்பங்கள் உருவாக்கம் பற்றி மானசாரம், மயமதம், காசிபம், சகளாதிகாசம், ரூபமண்டனம் முதலிய சிற்பசாத்திர நூல்கள் விளக்கம் தருகின்றன. கட்டிடக்கலைகளின் வரலாறு பற்றி மேலைநாட்டறிஞர்களும், கீழைநாட்டறிஞர்களும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். குறிப்பாக, பிரான்சியரான டுப்ரொயில், ஆங்கிலேயரான வின்சென்ற், பேர்சிபிரவுண், றொலிசன், நம்மவரான ஆனந்தகுமாரசாமி போன்றோர் முக்கியமானவர்கள்.

"காயமே கோயிலாக" என்ற அப்பர் தேவாரமும், "ஊனுடம்பு ஆலயம்" என்ற திருமூலர் திருமந்திரமும் ஆலய அமைப்பு மனித உடலின் அமைப்புக்கிணங்க அமையப் பெற்றுள்ளமையை விளக்கி நிற்கின்றன.

மனிதன் மேலே பார்த்தவாறு படுத்த நிலையில் ஆலயம்:

| | |
|---|---|
| கருவறை | - தலை |
| அந்தராளம் | - தலையின் கீழ்ப்பாகம் |
| அர்த்த மண்டபம் | - கழுத்து |
| மகா மண்டபம் | - மார்பு |
| பலிபீடம் (பத்திரலிங்கம்) } | |
| கொடிமரம் } | - தொப்பூழ், குறி |
| மூலாதார கணபதி } | |
| நிருத்த மண்டபம் | - தொடைகள் |
| கோபுரம் (தூலலிங்கம்) | - கால்கள் |

(ஆதாரம்- மகாபைரவர் ப. 43)

**மனிதன் நின்ற நிலையில் ஆலயம்**

| | |
|---|---|
| உப பீடம் (தூண்) | - பாதங்கள் |
| அதிஸ்டானம் (தளம்) | - அடி முழங்கால்கள் |
| கும்பஞ்சரம் | - உதரம் |
| பாடவர்க்கம் | - கைகள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஸ்தாபம் (கபோதம்) - தோள்கள்
கண்டம் - கழுத்து
சிகரம் (கூரை) - தலை
உஷ்ணணீயம் - முடித்தலைக்கேசம்
ஸ்தூபி (விமானம்) (ஆதாரம்-மகாபைரவர் ப-45)

இவ்வாறான கோயில்கள் மகாபிரசாத (பெருங்கோயில்) கட்டிட அமைப்பு முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

**அதிஸ்டானம்:**

அதிஸ்டானம் இவற்றில் முக்கியமானது. கோயிலின் அடிப்பகுதியையே அதிஸ்டானம் என்பர். இது கட்டிடத்தின் அடித்தளமாக அமைந்திருக்கும். இது பல படைகளை(அடுக்குகளை)க் கொண்டுள்ளது. உபானம், பத்மம், ஜகதி, குமுதம், கல, கம்பம், பட்டிகை என்பனவே படைகளாகும்.

**உபபீடம்:**

அதிஸ்டானத்தின் கீழ் அமைந்திருப்பது உபபீடம். இதிலும் பல படைகள் அமைந்திருக்கும்.

**கருவறை:**

கர்ப்பக்கிரகத்தில் (மூலத்தானம்) சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும். அம் மூலவருக்குப் பூசை வழிபாடுகள் நடத்தப்பெறும். இக்கருவறை கோயிலின் மிகப் புனிதமான பகுதியாகப் பேணப்படும்.

அந்தராளம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நந்தியெம்பெருமான், பலிபீடம், கொடித்தம்பம், மூலாதார கணபதி, நிருத்தமண்டபம், கோபுரம் (தூலலிங்கம்), பரிவாரக் கோயில்கள், பிரகாரங்கள் என்பன கோயில் கட்டிட அமைப்பின் ஏனைய கூறுகளிற் குறிப்பிடத்தக்கன.

**அந்தராளம்:**

கர்ப்பக்கிரகத்திற்கும், அர்த்தமண்டபத்திற்கும் இடையே உள்ள பகுதி. பூசகர் நைவேத்தியங்களை வைத்து, தீபாராதனை, அர்ச்சனை என்பவற்றை இப்பகுதியில் நின்றே செய்வர்.

**அர்த்தமண்டபம்:**

கர்ப்பக்கிருகத்தை அடுத்து அமைந்திருப்பது அர்த்தமண்டபம். இதைத் **திருஇடைக்கட்டு** எனச் சோழர்காலச் சாசனம் கூறுகிறது. ஆதியில் கர்ப்பக்கிரகமும் அர்த்தமண்டபமும் தனித்தனியாக அமைந்திருந்தன (திருவையாறு பஞ்சநதீஸ்வரர் கோயில், கீழையூர் கந்தர்ப்ப ஈஸ்வரம்). பிற்காலத்தில் கர்ப்பக்கிரகத்துக்கும், அர்த்தமண்டபத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியைத் தொடுத்து அந்தராளம் அமைக்கப்பெற்றது. (காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில்)

**மகாமண்டபம்:**

இம் மண்டபத்தில் நந்தியெம்பெருமான் மூலவரை நோக்கியவாறு அமர்ந்திருப்பர். அடுத்து பலிபீடம் (பத்திரலிங்கம்), கொடிமரம், கொடிமரத்தோடு இணைந்தவாறு மூலாதார கணபதி அமர்ந்திருப்பார்.

**கொடிமரம்:**

துஷ்ட தெய்வங்களை அகற்றவும், தேவகணங்களை அழைக்கவும், ஆலயத்தையும், பக்தர்களையும் காக்கவும் கொடித்தம்பம் நிறுவப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியேற்றமானது ஆன்மாக்கள் பாசங்களினின்றும் நீங்கிப் பதியை அடைதலையும், பஞ்ச கிருத்தியங்களில் இறைவனின் படைத்தல் தொழிலையும் குறிக்கின்றது. கொடிமரத்துக்கு, சந்தனம், தேவதாரு, சண்பகம், வில்வம், மகிழ் முதலிய மரங்கள் சிறந்தவை. கொடிமரத்துக்கு 33 கணுக்கள் அமைந்து மனித உடலின் முள்ளந்தண்டு வளையங்களைப் பிரதிபலிக்கின்றன.

**நிருத்தமண்டபம்:**

கோயில்களில் கூட்டுப்பிராத்தனை, நற்சிந்தனை, வழிபாடு, வாத்தியங்கள் இசைத்தல் என்பன நிகழும் இடமாக விளங்கும் மண்டபம் நிருத்தமண்டபமாகும்.

**கோபுரம் (தூலலிங்கம்):**

கோபுரம் தென்னிந்தியக் கட்டிட அமைப்பின் சிறப்பான அம்சமாகும். நாகர முறையில் அமைந்த கோயில்களில் கோபுரங்கள் காணப்படுவதில்லை; ஆயினும் பிரதானவாயில்களில் பிரமாண்டமான அலங்கார வளைவுகளையே கொண்டு விளங்குகின்றன. 12ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியக் கோயில்களின் மூலத்தானத்தின் மேலுள்ள விமானங்களையே அளவில் பெரியனவாகவும் வனப்புமிக்கனவாகவும் அமைத்திருந்தனர் (சோழர்காலத் தஞ்சைப்பெருங்கோயில், கங்கைகொண்ட சோழேச்சரம்). “விமானங்களின் வளர்ச்சியின் உன்னத நிலையே கோபுரங்களாகும்” என்பது கவனிக்கத்தக்கது. இக்காலத்திற்குப் பிந்திய கோயில்கள், விமானத்தை விட மிகப்பெரிய அளவிலான கோபுரங்களைக் கொண்டவையாக உள்ளன.

கோபுரக் கட்டிட அமைப்பு ஐவகைக் கோபுரங்களைச் சுட்டிநிற்கிறது என மானசாரம் என்ற சிற்பசாத்திர நூல் கூறுகின்றது.

1. துவாரசோபாக்கோபுரம்: இது முதலாம் பிரகாரக் கோபுரம். ஏகதளமாக அல்லது திரிதளமாக அமைந்திருக்கும்.
2. துவாசாலைக் கோபுரம்: இது இரண்டாம் பிரகாரக் கோபுரம். இரண்டு முதல் நான்கு தளங்களைக் கொண்டதாக இருக்கும்.
3. துவாத பிரசாதக் கோபுரம்: இது மூன்றாம் பிரகாரக் கோபுரம். மூன்று முதல் ஐந்து தளங்களைக் கொண்டதாக இருக்கும்.
4. துவாரகர்மியக் கோபுரம்: இது நான்காம் பிரகாரக் கோபுரம். நான்கு முதல் ஏழு தளங்களைக் கொண்டதாக இருக்கும்.
5. துவாரக் கோபுரம்: இது ஐந்தாம் பிரகாரக் கோபுரம். ஏழு முதல் பதினாறு தளங்களைக் கொண்டதாக இருக்கும்.

திருவரங்கம் ஏழு பிரகாரங்களையும் இருபத்தொரு கோபுரங்களையும் கொண்ட கோயிலாக உள்ளது. சோழர்காலத்தில் தென்னிந்தியாவில் வளர்ச்சி பெற்ற கோபுர அமைப்புமுறை விஜயநகர காலத்தில் இன்றியமையாத பேரம்சமாகியது. மதுரை நாயக்கர் காலத்தில் திராவிட கலைப்பாணியில் வானளாவிய கோபுரங்களைக் கொண்டவையாக பூரணத்துவம் மிக்கனவாக விளங்கின (மதுரை மீனாட்சியம்மன் கோயில் கோபுரம், திருவரங்க கோயில் கோபுரம்).

ஆதாரம் - கட்டடங்களும் சிற்பங்களும்
இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு-4.

**பரிவாரக் கோயில்கள்:**

சிற்பசாத்திர நூலான **மயமதம்** தேவர்படிமங்களை எவ்வெவ்விடங்களில் அமைக்க வேண்டும் என்ற விதிமுறையைக் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கில்** - துவாரபாலகர், நந்திகேஸ்வரர்
**தெற்கில்** - தட்சணாமூர்த்தி
**மேற்கில்** - மகாவிஷ்ணு அல்லது இலிங்கோற்பவர்
**வடக்கில்** - பிரம்மா
அர்த்தமண்டபத்தின் தெற்கில் விநாயகர், நடராஜர்
அர்த்தமண்டபத்தின் வடக்கில் கார்த்தியாயினி, சேத்திரபாலகர்

பரிவாரக் கோயில்களைப் **பஞ்சாயதனக் கோயில்கள்** எனவும் அழைப்பர். குப்தர் காலமுதல் இவ்வாறான கோயில்கள் அமைக்கப்பட்டு வந்துள்ளன. பிரதான கோயில்கள் அமைந்த இடங்களைச் சுற்றி நான்கு மூலைகளிலும் விநாயகர், சுப்பிரமணியர், அம்மன் சப்தமாதர் முதலியோருக்கு அமைக்கப்படும் தனிக்கோயில்கள் பரிவாரக் கோயில்களாகும். சோழர்காலத்தில் அஷ்டபரிவாரக் கோயில்கள் இருந்திருக்கின்றன (எழும்பூரில் உள்ள கடம்பவனேஸ்வரக் கோயில்). நார்த்தமலையிலுள்ள விஜயசோழேஸ்வரத்தில் ஏகதள விமானமும், அர்த்தமண்டபமும் கொண்ட ஆறு பரிவார தேவர்கோயில்களும், திருக்கட்டளை சுந்தரேஸ்வரத்தில் சூரியன், சப்தமாதர், விநாயகர். சுப்பிரமணியர், சந்திரன், சண்டேஸ்வரர், ஜேஷ்டாதேவி ஆகிய ஏழு பரிவாரதேவர் கோயில்களும் அமைந்திருக்கின்றன. காசிபம், மயமதம் என்னும் சிற்பசாத்திர நூல்களில் அஷ்டபரிவார தேவர் கோயில்கள் அமைந்தமையைக் கூறுகின்றன.

**காசிபம்:** விருஷவதேவர், அக்கினி, துர்க்கை, சப்தமாதர், வீரபத்திரர், விநாயகர், சுப்பிரமணியர், ஜேஷ்டாதேவி, சூரியன் இவர்களில் ஒவ்வொருவரை அஷ்டபரிபாலனக் கோயில் ஒவ்வொன்றிலும் தாபனம் பண்ணவேண்டுமென்று **காசிபம்** என்ற இச் சிற்பநூல் கூறுகிறது.

**மயமதம்:** இச்சிற்பநூல் நந்தி, கணபதி, பிரம்மா, குகன், சப்தமாதர், ஆரியமான், அச்சுதன் என்போரை அஷ்டபரிபாலனத்தேவர்கள் என்று வேறுவகையில் கூறுகிறது.

**விமான தெய்வங்கள்:** "ஈசான சிவகுருபத்ததி" விமான தெய்வங்கள் பற்றி விளக்குகிறது. விமானங்களின் எல்லாத்திசைகளிலும் தெய்வங்களின் படிமங்களைத் தாபனம் பண்ணவெண்டும் எனக் கூறுகிறது.

தெற்கில் (விமானத்தின்) - தட்சணாமூர்த்தி
மேற்கில் " - இலிங்கோற்பவர் அல்லது விஷ்ணு
வடக்கில் " - துர்க்கை அல்லது பிரம்மா
அர்த்தமண்டபச் சுவரில் - விநாயகர்
அர்த்தமண்டப வடகிழக்குச் சுவரில் - சேத்திர பாலகர்

**கோயில் வகைகள்**

சிவாலயங்கள் அமைக்கும் இடங்களைத் திட்டமிடல் பற்றியும் கர்ப்பக்கிரகம், மண்டபங்கள், பிரகாரங்கள், கோபுரங்கள் அமைத்தல் பற்றியும் ஆகமங்கள் விளக்கிக் கூறுகின்றன. ஒவ்வொரு ஆகமம் கூறும் முறையிலேயே குறிப்பிட்ட ஆலயம் பொருத்தமான அளவுப் பிரமாணத்திற்கமையக் கட்டப்படுதல் வேண்டும். சிறப்பாக, காரண ஆகமத்தின்படி இவ்வாறான அமைப்புக்கள் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

கோயில்களின் அளவுப் பிரமாண முறையில் அவை இரண்டு வகையாகக் கொள்ளப்படுகின்றன.

1. அல்பசிரசாதம் (சிறிய கோயில்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மகாபிரசாதம் (பெருங் கொயில்கள்)

கோயில்களின் தளங்களை முன்னிறுத்தி, ஏகதளம், துவிதளம், திரிதளம் என பதினாறுதளம் வரையிலான கோயில்கள் என வகைப்படுத்துவர். கோயில் கட்டிடத்தின் வடிவமைப்பு, புறத்தோற்றம் என்பவற்றைக் கொண்டும் வகைப்படுத்தப்படுகின்றது. அவையாவன:

சதுராஸ்யம் (சதுரம்)
விருத்தம் (வட்டம்)
சதுராஸ்ர தீர்க்கம் (நீள்சதுரம்)
ஹஸ்திப் பிருஷ்டம் (தூங்கானைமாடம்)
விருத்தாயதம் (அரைவட்டம்)
ஷட்கோணம் (அறுகோணம்)
அக்ஷ்டாஸ்வரம் (எண்கோணம்)

மானசாரம் என்ற சிற்ப சாத்திர நூலும், சுப்ரபேதம் என்ற ஆகமமும் நாகரம், வேசரம், திராவிடம் என்னும் மூவகைக் கோயில்களைப் பற்றிக் கூறுகின்றன.

**நாகரம்:** "அடியிலிருந்து நுனிவரை நாற்சதுரமாய் அமைந்த விமானம் நாகரம் எனப்படும்." இது ஆண் விமானம். இவ்வகைக் கோயில்கள் இமயம் முதல் விந்தியம் வரை உள்ளன.

**வேசரம்:** "கிரீவத்துக்கு மேலான சிகரம் வட்டவடிவமாய் அமைந்த கோயில்கள் வேசரம் எனப்படும்." இது அலி விமானம். இவ்வகைக் கோயில்கள் கிருஷ்ண நதிப் பள்ளத்தாக்கில் உள்ளன.

**திராவிடம்:** "திராவிட விமானங்களில் கிரீவத்துக்கு மேலான சிகரம் ஷட்கோணமாகவோ எண்கோணமாகவோ அமைந்திருக்கும்." இது பெண் விமானம். இவ்வகைக் கோயில்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

**பிரகாரங்கள் (வீதிகள்):**

கோயில்களில் அவற்றைச் சுற்றிவர, பிரகாரங்கள் அமைந்து பிரதட்சணம் பண்ணும் முறையில் விளங்குகின்றன.

**ஒரு பிரகாரம்:** இது பல பிரகாரங்களுக்குரிய பொருள்களையும் அடக்கும்.

**மூன்று பிரகாரங்கள்:** இவை தூல, சூக்கும, காரண சரீரங்களைக் குறிக்கும்.

**ஐந்து பிரகாரங்கள்:** இவை அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்களை(உடம்புகளை)க் குறிக்கும்.

**ஏழு பிரகாரங்கள்:** உடம்பிலுள்ள இரசம்/ தோல், இரத்தம், தசை, மேதை, எலும்பு, மச்சை, சுக்கிலம், என்ற சப்த(ஏழு) தாதுக்களையும் இவை குறிக்கும்.

"ஆலயம் தானும் அரனேனத் தொழுமே."
"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்."

உசாத்துணை நூல்கள்:

1. மகாபைரவர் (ப. 43, 45)
2. கட்டடங்களும் சிற்பங்களும்
   இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு 4.
3. சைவசமய சிந்தாமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி...

உ
சிவமயம்

# அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் - திருப்பூந்தராய்

**3ஆம் திருமுறை** **பண் - காந்தாரபஞ்சமம்**

அருச்சனை
திருச்சிற்றம்பலம்

1. **பந்துசேர்விரலாள் பவளத்துவர் வாயினாள் பனிமாமதி போல் முகத்து**
**அந்த மில்புக ழான்மலை மாதொடும் ஆதிப்பிரான்**
**வந்துசேர்விடம் வானவரெத் திசையுந்நிறைந்து வலஞ்செய்து மாமலர்**
**புந்தி செய்திறைஞ் சிப்பொழி பூந்தராய் போற்றுதுமே.**

(ப-ரை) பந்துசேர் - பந்து சோர்ந்த, விரலாள் - திருவிரலினையுடையவரும், பவளம் - பவளம் போன்ற, துவர் வாயினாள் - சிவந்த திருவாயையுடையவரும், பனி மாமதிபோல் முகத்து - குளிர்ச்சி பொருந்திய நிறைமதி போன்ற திருமுகத்தையுடைய, அந்தம் இல்புகழான் - முடிவில்லாத பெரும் புகழினையுடையவருமாகிய, மலை மாதொடும் - பார்வதி தேவியாரோடும், ஆதிப்பிரான் - முதற் பெருந் தேவராகிய சிவபெருமான், வந்து சேர்வு இடம் - எழுந்தருளி வந்து சேர்தலை உடைய இடமாகிய, வானவர் - தேவர்கள், எத்திசையும் - எல்லாப் பக்கங்களிலும், நிறைந்து - நெருங்கி, வலம் செய்து - வலம் வந்து, புந்தி செய்து - இவர் நம்மையாளும் இறைவர் என்று புத்தி பண்ணி, இறைஞ்சி - வணங்கி, மாமலர் - சிறந்த பூக்களை, பொழி - மிகுதியாகத் தூவுகின்ற, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

2. **காவியங்கருங் கண்ணினாள்கனித் தொண்டைவாய்க் கதிர்முத்தநல்**
**வெண்ணகைத்**
**தூவி யம்பெடை யன்ன நடைச்சுரி மென்குழலாள்**
**தேவியுந்திரு மேனியோர்பாக மாயொன்றிரண் டொருமூன் றொடுசேர்பதி**
**பூவி லந்தணன் ஒப்பவர் பூந்தராய் போற்றுதுமே.**

(ப-ரை) காவி - நீல மலர்போலும், அம் - அழகிய, கரும் கண்ணினாள் - கரிய கண்களையுடையவரும், தொண்டை கனி - கொவ்வைக் கனிபோலும், வாய் - திருவாயினையும், கதிர் முத்தம் - ஒளி விரிக்கும் முத்துக்கள் போலும், நல் - நல்ல, வெண்நகை - வெண்நகையையும், தூவி - இறகுகளையுடைய, அம் - அழகிய பெடை அன்னம் நடை - பெண் அன்னத்தின் நடையையும், சுரி மென் குழலாள் - சுருண்ட மெல்லிய அளகத்தையும் உடையவரும் ஆகிய, தேவியும் - உமாதேவியாரும், திருமேனி ஓர்பாகமாய் - திருமேனியில் ஒரு பாகமாயும், (தாமொருபாகமாயும் இறைவன் எழுந்தருளியுள்ள) ஒன்று இரண்டு ஒரு மூன்றுஒடுசேர் - ஆறாவது என்னும் கிரமத்தில் பொருந்திய, பதி - திருப்பதியாகிய, பூவில் அந்தணன் - தாமரை மலரில் எழுந்தருளிய பிரமதேவரை, ஒப்பவர் - நிகர்ப்பவராகிய மறையவர் வசிக்கின்ற, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **பையராவரும் அல்குல் மெல்லியல் பஞ்சின்னேரடி வஞ்சிகொள் நுண்ணிடைத்**
**தைய லாளொரு பாலுடை யெம்மிறை சாருமிடம்**
**செய்யெலாங்கழு நீர்கமலம்மலர்த் தேறலூறலிற் சேறுல ராதநற்**
**பொய்யி லாமறை யோர்பயில் பூந்தராய் போற்றுதுமே.**

(ப-ரை) பை அரா வரும் - படத்தையுடைய பாம்பினைப் போலும், அல்குல் - அல்குலையும், மெல் இயல் - மெல்லிய சாயலினையும், பஞ்சின் நேர் அடி - பஞ்சினை நிகர்த்த திருவடியினையும், வஞ்சிகொள் நுண்ணிடை - வங்சிக்கொடியினை யொத்த இடையினையும் உடைய, தையலாள் - உமாதேவியாரை, ஒரு பால்உடை எம் இறை - ஒரு பாகத்திற் கொண்ட எம் இறைவர், சாரும் இடம் - எழுந்தருளிய தலமாகிய, செய் எலாம் - வயல்களிலெல்லாம், கழுநீர் கமலம் மலர் - செங்கழுநீர்ப்பூவும் தாமரைப்பூவும் ஆகிய இவற்றின், தேறல் ஊறலில் - தேன் பாய்தலினால், சேறுஉலராத - சேறு புலராத, நல் - நல்ல வளமுள்ள, பொய் இலா மறையோர் பயில் - பொய்யினை அறியாத வேதியர் வாழ்கின்ற, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

4. **முள்ளிநாள்முகை மொட்டியல் கோங்கினரும்பு தேன்கொள்குரும் பைமூவா மருந்து**
**உள்ளி யன்றபைம் போற்கல சத்திய லொத்தமுலை**
**வெள்ளிமால்வரை அன்னதோர் மேனியின் மேவி னார்பதிவீ மருதண்பொழில்**
**புள்ளி னந்துயில் மல்கிய பூந்தராய் போற்றுதுமே.**

(ப-ரை) முள்ளி நான் முகை - தாமரையின் புதிய முகை, மொட்டுஇயல் கோங்கின் அரும்பு - புது மொட்டின் தன்மை வாய்ந்த கோங்கரும்பு, தேன் கொள் குரும்பை - தேனினைக் கொண்ட தென்னங்கரும்பை, மூவாமருந்து - அமிர்தமானது, உள் இயன்ற - உள்ளே நிறைந்த, பைம்பொன் கலசத்து இயல் - பைம்பொன்னாற் செய்த கலயம் ஆகிய இவற்றின் தன்மையினை, ஒத்த - நிகர்த்த, முலை - திருத் தனபாரங்களையுடைய பெரிய நாயகியார், வெள்ளிமால்வரை அன்ன - பெரிய வெள்ளி மலையையொத்த, ஓர் - ஒப்பற்ற, மேனியின் மேவினார் - திருமேனியில் எழுந்தருளப் பெற்றவராகிய இறைவரது, பதி - திருப்பதியாகிய, வீ மரு தண் பொழில் - பூக்களையுடைய குளிர்ந்த சோலைகளில், புள் இனம் துயில் மல்கிய - பறவைக் கூட்டம் தூங்குகின்ற, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் -வணங்கவோம் என்றவாறு.

5. **பண்ணியன்றெழு மென்மொழியாள் பகர்கோதை யேர்திகழ்பைந் தளிர்மேனியோர்**
**பெண்ணி யன்றமொய்ம் பிற்பெருமாற் கிடம்பெய் வளையார்**
**கண்ணி யன்றெழு காவிச்செழுங்கரு நீலமல்கிய காமருவாவிநற்**
**புண்ணி யருறை யும்பதி பூந்தராய் போற்றுதுமே.**

(ப-ரை) பண் இயன்று எழும் - பண்ணமைந்துண்டாகின்ற, மென்மொழியாள் - மெல்லிய மொழிகளை யுடையவராகிய, பகர் - சொல்லுகின்ற, கோதை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளகபாரத்தையும், ஏர்திகழ் - அழகு விளங்குகின்ற, பைதளிர் - பசிய தளிர்போலும், மேனி - திருமேனியையும் உடைய, ஓர் பெண்இயன்ற - ஒப்பற்ற உமையம்மையார் பொருந்திய, மொய்ம்பின் - திருத்தோள்களையுடைய, பெருமாற்கு இடம் - சிவபெருமானுக்கு இடமாகவுள்ள, பெய்வளையார் - இடப்பட்ட வளைகளையுடைய பெண்களது, கண் இயன்று எழு - கண்ணை ஒத்து மலர்கின்ற, காவி செழும் கருநீலம் - காவிமலரோடு செழுமிய கரிய நீல மலர்களும், மல்கிய - செறிந்த, காமரு வாவி - அழகிய தடாகங்களை உடைய, நல் புண்ணியர் உறையும் - நன்மைமிக்க புண்ணியர் வாழும், பதி - பதியாகிய, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

6. **வாணிலா மதிபோல் நுதலாள் மடமாழை ஒண்கணாள் வண் தரளந்நகை**
**பாணி லாவிய இன்னிசை யார்மொழிப் பாவையொடும்**
**சேணிலாத்திகழ் செஞ்சடையெம் அண்ணல் சேர்வதுசிக ரப்பெருங்கோயில்சூழ்**
**போணி லாநுழை யம்பொழிற் பூந்தராய் போற்றுதுமே.**

(ப-ரை) வாள் நிலா மதிபோல் - ஒளியையுடைய நிலவைப் பரப்பும் சந்திரனைப் போன்ற, நுதலாள் - நெற்றியை யுடையவரும், மடம் - மடப்பத்தையுடைய, மாழை - மாவடுப்போலும், ஒண்கணாள் - ஒள்ளிய கண்களை யுடையவரும், வண்தரளம் நகை - வளவிய முத்துப்போன்ற நகையையும், பாண்நிலாவிய இன் இசை ஆர் - பண்ணோடு கூடிய இனிய இசை சேர்ந்த, மொழி - வார்த்தைகளையும் உடையவருமாகிய, பாவை ஒடும் - உமாதேவியாரோடும், சேண் நிலாதிகழ் - தூரத்தே விளங்குவதாகிய சந்திரனையுடைய, செம் சடை எம் அண்ணல் - சிவந்த சடையையுடைய எம் இறைவர், சேர்வது - எழுந்தருளி யிருப்பதாய, சிகரம் பெரும்கோயில் சூழ் - சிகரங்களையுடைய பெரிய கோயில்கள் சூழப்பெற்ற, போழ்நிலா நுழையும் - போழ்ந்த சந்திரன் நுழைகின்ற, பொழில் - சோலைகளையுடைய, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

7. **காருலாவிய வார்குழலாள் கயற்கண்ணி னாள்புயற் காலொளி மின்னிடை**
**வாருலாவிய மென்முலையாள் மலைமா துடனாய்**
**நீருலாவியசென் னியன்மன்னி நிகருநாம முந்நான்கு நிகழ்பதி**
**போரு லாவெயில் சூழ்பொழிற் பூந்தராய் பொற்றுதுமே.**

(ப-ரை) கார் உலாவிய - கருநிறம் பொருந்திய, வார் குழலாள் - நீண்ட கூந்தலை யுடையவரும், கயல் கண்ணினாள் - கயல் மீன் போலும் கண்களை யுடையவரும், புயல்கால் ஒளிமின் - மேகங்களிடையிற் றோன்றுகின்ற ஒளியினையுடைய மின்னலை நிகர்க்கும், இடை - இடுப்பினையும், வார்உலாவிய - கச்சணியப்பெற்ற, மென்முலையாள் - மெல்லிய திருத்தனங்களையும் உடையவரும் ஆகிய, மலைமாது - பார்வதிதேவியார், உடனாய் - உடனாக, நீர் உலாவிய - கங்கை நீர் தாங்கிய, சென்னியன் - திருமுடியை உடைய இறைவன், மன்னி - எழுந்தருளி யிருக்கப்பெற்ற, நிகரும் - தன்னைத்தான் நிகர்க்கும், நாமம் முந்நான்கு - பன்னிரண்டு திருப்பெயர்கள், நிகழ்பதி - பெற்று விளங்கும் திருப்பதியாய, போர் உலா எயில் - போரிற்கெடாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை வாய்ந்த திருமதில், சூழ் - சுழ்ந்த, பொழில் - சோலைகளையுடைய, பூந்தராய் - பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

**8. காசைசேர்குழ லாள்கய லேர்தடங்கண்ணி காம்பனதோட் கதிர்மென்முலைத் தேசு சேர்மலை மாதமருந் திருமார் பகலத்து**
**ஈசன்மேவும் இருங்கயிலை எடுத்தானை அன்ற டர்த்தான் இணைச்சேவடி பூசை செய்பவர் சேர்பொழிற் பூந்தராய் போற்றுதுமே.**

(ப-ரை) காசை சேர் குழலாள் - காயாம் பூப்போலும் கருநிறத்தையுடைய கூந்தலையுடையவரும், கயல் ஏர் தடம் கண்ணி - சேற் கெண்டை போலும் அழகிய பரந்த திருக்கண்களையுடையவரும் ஆகிய, காம்பு அனதோள் - மூங்கிலை ஒத்த தோளையும், கதிர் மெல்முலை - பொன்னிறம் வாய்ந்த மெல்லிய திருத்தனங்களையும் உடைய, தேசு சேர் - சிவஞான ஒளிவாய்ந்த, மலைமாது - உமாதேவியார், அமரும் - விரும்பத்தக்க, திருமார்பு அகலத்து - பரந்த திருமார்பினையுடைய, ஈசன் மேவும் - சிவபெருமான் எழுந்தருளியிருக்கும், இரும்கயிலை எடுத்தானை - பெரிய கயிலாய மலையை எடுத்தவனாகிய இராவணனை, அன்று - அந்நாளில், அடர்த்தான் - நசுக்கி யொடுக்கிய இறைவனது, இணைசே அடி - செவ்விய இரண்டு திருவடிகளையும், பூசை செய்பவர் - பூசிப்பவர்களாகிய பெரியார், சேர் - சேரப் பெற்ற, பொழில் - சோலை சூழ்ந்த, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

**9. கொங்குசேர்குழ லாள்நிழல் வெண்ணகைக் கொவ்வைவாய்க் கொடியே ரிடையாளுமை**
**பங்கு சேர்திரு மார்புடையார் படர்தீ உருவாய்**
**மங்குல்வண்ணனும் மாமலரோனும் மயங்க நீண்டவர் வான்மிசை வந்தெழு பொங்கு நீரின்மி தந்தநற் பூந்தராய் போற்றுதுமே.**

(ப-ரை) கொங்கு சேர் - மணந்தங்கிய, குழலாள் - கூந்தலை யுடையவரும், நிழல் வெண்நகை - ஒளி பொருந்திய வெண்ணிறம் வாய்ந்த நகையினையும், கொவ்வைவாய் - கொவ்வைக்கனிபோலும் இதழ்களையும், கொடி ஏர் இடையாள் - கொடி போலும் இடையினையும் உடையவரும் ஆகிய, உமை பங்கு சேர் - உமாதேவியார் ஓர் பாகத்திற் சேர்ந்த, திருமார்பு உடையார் - திருமார்பினை யுடையவராகும், படர் - படர்ந்த, தீ உருவாய் - நெருப்புருவமாகி, மங்குல் வண்ணனும் - மேக வண்ணனாகிய திருமாலும், மாமலரோனும் - சிறந்த தாமரை மலரிலிருக்கும் பிரமனும், மயங்க - மயங்கும்படி, நீண்டவர் - நீண்டருளிய இறைவரது, வான்மிசை வந்து எழு - ஆகாயம் அளாவுமாறு மேலெழுந்த, பொங்குநீரின் - பொங்கிய கடலின் மேல், மிதந்த - தோணியாக மிதந்த, நல் - நல்ல, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **கலவமாமயி லாரியலாள் கரும்பன்ன மென்மொழி யாள்கதிர்வாள்நுதற்**
**குலவு பூங்குழ லாளுமை கூறனை வேறுரையால்**
**அலவைசொல்லுவார் தேரமண் ஆதர்களாக்கினான் தனை நண்ணலும் நல்குநற்**
**புலவர் தாம்புகழ் பொற்பதி பூந்தராய் போற்றுதுமே.**

(ப-ரை) கலவம்மா மயில்ஆர் - கலாபத்தையுடைய அழகிய மயில் போலும், இயலாள் - சாயலையுடையவரும், கரும்பு அன்ன - கரும்பு போலும், மென் மொழியாள் - மெல்லிய சொற்களை யுடையவரும், கதிர்வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியையும், குலவு பூ குழலாள் - விளக்கமுற்ற மலரினையணிந்த கூந்தலையும் உடையவரும் ஆகிய, உமை - உமையம்மையாரை, கூறனை - ஒரு பாகத்தினுடைய இறைவனை, வேறு உரையால் - மனம் வேறுபட்ட விகற்ப வார்த்தைகளினால், அல்லவை - தகாதவற்றை, சொல்லுவார் - சொல்வோராகிய, தேர் அமண் - புத்தர்களையும் சமணர்களையும், ஆதர்கள் ஆக்கினான் - அறிவில்லாதவர்களாக்கினானது, தனை நண்ணலும் - தன்னை வந்து அடைதலும், நல்கும் - வேண்டியதைக் கொடுக்கும், நல் - நல்ல, புலவர் புகழ் - புலவர் புகழாநின்ற, பொற்பதி - அழகிய தலமாகிய, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

11. **தேம்பல் நுண்ணிடை யாள்செழுஞ் சேலன கண்ணியோ டண்ணல்சேர் விடந்தேனமர்**
**பூம்பொ ழில்திகழ் பொற்பதி பூந்தராய் போற்றுதுமென்று**
**ஓம்புதன் மையன் முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்தன் ஒண்தமிழ் மாலைகொண்டு**
**அம்ப டியிவை ஏத்தவல் லார்க் கடை யாவினையே.**

(ப-ரை) தேம்பல் நுண் இடையாள் - வருந்தும் இயல்புடைய நுண்ணிய இடையை உடையவரும், செழும் சேல் அன கண்ணி ஓடு - செழுவிய கெண்டைமீன் போன்ற கண்களையுடையவருமாகிய இறைவியோடு, அண்ணல் சேர்வு இடம் - பெருமை மிக்க இறைவன் எழுந்தருளிய இடமாய், தேன் அமர் - தேன் தாங்கிய, பூம்பொழில் - பூஞ்சோலைகள், திகழ் - விளங்குகின்ற, பொற்பதி - அழகிய திருப்பதியாகிய, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் என்று - வணங்குவோம் என்று, ஓம்பு தன்மையன் - கடைபோகப் பாதுகாக்கின்ற நற்குணமுடையானும், முத்தமிழ் நான்மறை - முத்தமிழையும் நான்கு வேதங்களையும் உடைய, ஞான சம்பந்தன் - திருஞான சம்பந்தன் பாடிய, ஒண்மாலை இவை கொண்டு - ஒள்ளிய தமிழ் மாலையாகிய இவற்றைக் கொண்டு, ஆம்படி - தமக்கு இயைந்த வண்ணம், ஏத்த வல்லார்க்கு - போற்ற வல்லவர்களுக்கு, வினை அடையா - வினைகள் சேராவாம் என்றவாறு.

திருச்சிற்றம்பலம்

உரைக்குறிப்பு: கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார்
உதவியவர் : வ. பேரின்பநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி.

உ
சிவமயம்

# சைவசமயம்
# மாணவர் அறிவுப் பெட்டகம்
## (வினா விடை)

**128. அடியவர்க்கு அமுதளித்தல் எவ்வாறு கூறப்படுகிறது?**
மாகேஸ்வர் (சிவனடியார்) பூசை.

**129. பசியின் முக்கியத்துவத்தை ஔவையார் எவ்வாறு பாடுகிறார்?**
**"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவம் முயற்சி தாளாண்மை - தேனின்**
**கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்**
**பசிவந்திடப் பறந்து போம்."**

**130. புறநானூறு, திருமந்திரம், திருக்குறள் என்பன அன்னதானத்தின் சிறப்பை எங்ஙனம் காட்டுகின்றன?**
புறநானூறு - **'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.'**
திருமந்திரம் - **'யாவர்க்குமாம் உண்ணும் போதொருகைப்பிடி'**
திருக்குறள் - **'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை.'**
**'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி.'**

**131. சிவனடியார்களுக்கு அருளாளர்கள் அமுதூட்டிய நிகழ்வுகளில் பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ள சிலவற்றைத் தருக?**
1) இளையான்குடிமாறநாயனார் - சிவனடியாராக வந்த சிவபெருமானுக்கு வறுமையிலும் திருவமுது அளித்தமை.
2) சிறுத்தொண்டநாயனார் - பைரவ வேடங்கொண்ட சிவபெருமானுக்கு வாளால் மகனை அரிந்து உணவு சமைத்து திருவமுதளித்தமை.
3) சம்பந்தர், அப்பர் - திருவீழிமிழலையில் பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு இறைவனருளால் படிக்காசு பெற்று உணவளித்தமை.
4) மாணிக்கவாசகர் - பாண்டிய மன்னன் குதிரைவாங்கக் கொடுத்த பணத்தைக் கொண்டு திருப்பெருந்துறையில் சிவத்தொண்டு செய்து சிவனடியார்களுக்குத் திருவமுதூட்டியமை.
5) அப்பூதியடிகள் - திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் திருவமுது படைத்தமை.

**132. சரியை (வழிபாடு) நெறி நின்ற அடியவர் யார்?**
திருநாவுக்கரசர் - உழவாரத் தொண்டு செய்தவர்.

**133. சரியைத் தொண்டுகளாகக் கருதப்படுபவை எவை?**
திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், நந்தவனம் அமைத்தல், மலர்பறித்தல், மாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுதல், இறைவன் புகழ் பாடுதல், சிவனடியார்களுக்கு திருவமுதூட்டல், தண்ணீர்ப் பந்தல் அமைத்தல் போன்றன சிவதொண்டு அல்லது சிவவினை என்னும் சரியைத்தொண்டு ஆகும்.

**134. சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்ற பதங்களுக்குரிய செயற்பாடுகளை விளக்குக.**

சரியையில் சரியை - அலகிடல், மெழுக்கிடல் போன்றன.
சரியையில் கிரியை - விநாயகர் போன்ற உருவமூர்த்திகளைப் பூசித்தல்.
சரியையில் யோகம் - உருத்திர மூர்த்தியைத் தியானம் செய்தல்.
சரியையில் ஞானம் - தியானத்தில் இறையனுபவம் பெறுதல்.

**135. சைவபரிபாலன சபை எப்போ, ஏன் தோற்றுவிக்கப்பட்டது?**

1888ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29ஆம் திகதி (29.04.1888) யாழ்ப்பாணம் சைவ சமய பரிபாலன சபை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. 15.10.1890 இல் இச்சபை 'சைவ பரிபாலன சபை' என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது.
ஆறுமுகநாவலர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்தோடு தோற்றுவிக்கப்பட்டது.

**136. சைவபரிபாலன சபை எவ்வாறான பணிகளை மேற்கொண்டது?**

சமயப்பணி, சமூகப்பணி, அச்சுப்பணி,
பொதுப்பணி, கல்விப்பணி போன்ற பணிகளை மேற்கொண்டது.

**137. சித்திரபுத்திரனார் விரதம் எப்போது, எவ்வாறு அநுட்டிக்கப்படுகிறது?**

சித்திரை மாதம் சித்திரா பௌர்ணமியன்று சித்திரபுத்திரனார் கதை படித்துச் சித்திரைக் கஞ்சிவார்த்து அநுட்டிக்கப்படும்.

**138. அக்கிர சந்தானி என்றால் என்ன?**

சித்திரபுத்திரனால் வலது கையால் எழுத்தாணியை கொண்டு(இடதுகையில் வைத்திருந்து)எழுதும் புத்தகம்.

**139. சித்திரபுத்திரனார் விரதம் தானதருமங்களைவிட உயர்வானது என்பதை விளக்கும் கதை எது?**

அமராவதி கதை.

**140. மார்க்கண்டேயரின் கதை உணர்த்தும் படிப்பினை யாது?**

சிவபக்தியில் இருப்பவர்கள் காலனையும் வெல்லும் ஆற்றலை இறைவன் அளிப்பான் என்ற உண்மையை மார்கண்டேயர் 16 வயது முடிந்ததும் இறப்பை நீக்கி என்றென்றும் 16வயது வாழ இறைவன் அருளியமை படிப்பினையாகிறது.

**141. பொன்னாலை வரதராசப்பெருமாள் ஆலயம் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகிறது? இவ்வாலயத்தின் தோற்றம் பற்றிக் கூறும் நூலின் பெயர் என்ன?**

சுசர்ணாலயம், சதுரங்கஷேத்தரம்.
தட்சணகைலாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**142. இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின்மீது பாடப்பட்ட நூல்கள் எவை?**

இணுவைப் பதிகம், கல்யாணவேலவர் திருவூஞ்சல், இணுவை முருகன் பக்திரசக் கீர்த்தனைகள், இணுவைஅந்தாதி, இணுவை முருகன் பிள்ளைத்தமிழ் முதலியன.

**143. இணுவை கந்தசுவாமி ஆலய மஞ்சம் யாரால், எப்போ அமைக்கப்பட்டது? அது எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

பெரிய சந்நியாசியார் என்ற ஆறுமுகம் சந்நியாசியாரால் 1912 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இது **"உலகப் பெருமஞ்சம்"** என்று அழைக்கப்படுகிறது.

**144. மண்டூர் முருகன் ஆலயவரலாற்றை எவற்றின்மூலம் அறியலாம்?**

மரபுக்கதைகள், சீர்பாதக்குலக் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம் என்பவற்றின் மூலம் அறியலாம்.

**145. i) மண்டூர் முருகன் ஆலயத்தில் பூசை செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**
**ii) அவர் எவ்வாறு பூசை செய்கிறார்?**

i) கப்புகனார்

ii) கதிர்காமத்தில் செய்வது போல் வெள்ளைத் துணியால் வாயைக் கட்டி மௌன பூசை செய்கிறார்.

**146. மண்டூர் முருகன் ஆலய அமைப்புமுறையைக் கொண்டு, இவ்வாலயம் எப்பெயரால் வழங்கப்படுகிறது?**

சின்னக்கதிர்காமம் என்று அழைக்கப்படுகிறது.

**147. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வைகாசிப் பொங்கல் இடம் பெறும் சடங்குகள் எவை?**

கச்சு நேரல், கடல் நீரில் விளக்கு ஏற்றுதல், வளந்து நேரல், தூளி பிடித்தல் போன்றன.

**148. நெவில் என்ற ஆங்கிலத் தளபதி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை அழிக்க முயன்றபோது, அங்கு நின்ற பனிச்சைமரம் அதைத் தடுத்தவரலாற்றைக் கூறுவது எது?**

பனிச்சை ஆடியசிந்து.

**149. பஞ்ச ஈச்சரங்கள் எவை?**

1) திருக்கேதீச்சரம் (மாதோட்டம்), 2) திருக்கோணேச்சரம் (திருகோணமலை)
3) நகுலேச்சரம் (கீரிமலை) 4) முன்னேச்சரம் (சிலாபம்)
5) தொண்டீச்சரம் (தெய்வேந்திரமுனை/ தேவன்துறை)

**150. திருக்கேதீச்சரம் எந்நாயன்மாரால் பாடப்பட்டது?**

சம்பந்தராலும், சுந்தரராலும் பதிகங்கள் பாடப்பட்டன. அப்பரின் திருவீழிமிழலைப் பதிகத்தில் - "பூதியணி பொன்னிறத்தார்..... கேதீசரம் மேவினார்" (6.51.2) இவ்வாலயம் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**151. திருக்கேதீச்சரம் தொடர்பாக ஆறுமுகநாவலர் விடுத்த விஞ்ஞாபனம் என்ன?**

"மன்னாருக்குச் சமீபத்தில் திருக்கேதீச்சரம் என்னும் தேன்பொந்து ஒன்று உள்ளது; அங்கு மருந்து ஒன்று மறைந்து இருக்கிறது; அதனைச் சென்றடையுங்கள்." என்பதாகும்.

**152. i) திருக்கேதீச்சர ஆலய தலபுராணம் எது?**
**ii) இவ்வாலயம் பற்றி எழுந்த நூல்கள் எவை?**

i) திருக்கேதீச்சரப் புராணம் (அச்சுவேலி கு. வைத்தீஸ்வரக்குருக்கள்), திருக்கேதீச்சர புராணம் (பண்டிதர். ச. இராமச்சந்திரன்).

ii) தட்சணகைலாய மான்மியம், திருக்கேதீச்சர மான்மியம் (பண்டிதர் மு. கந்தையா) மாந்தைப்பள்ளு, திருக்கேதீச்சரநாதர் பதிகம், கிள்ளை விடுதூது போன்றன.

**153. திருக்கேதீச்சர மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பவை யாவை?**

மூர்த்தி - இறைவன் - திருக்கேதீச்சர நாதர்.
இறைவி - கௌரி அம்பாள்.
தலம் - திருக்கேதீச்சரம்.
தீர்த்தம் - பாலாவி.
விருட்சம் - வன்னிமரம்.

**154. மாமாங்கப் பிள்ளையார் ஆலய மகோற்சவம் எப்போது நடைபெறும்?**

ஆடிஅமாவாசையைத் தீர்த்த நாளாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெறும்.

**155. இலங்கையில் பிதிர்கடன் செய்யும் தீர்த்தங்கள் எவை?**

1) வடக்கு - கீரிமலைத் தீர்த்தம்.
2) கிழக்கு - மாமாங்கத் தீர்த்தம்.
3) மேற்கு - முகத்துவாரம், களனிகங்கை.

**156. சைவநாற்பாதங்களும் எவை? இவற்றின் மூலம் கிடைக்கும் முத்தி யாவை?**

சரியை - (தாசமார்க்கம், அடிமைநெறி) சாலோகமுத்தி.
கிரியை - (சற்புத்திரமார்க்கம், மகன்மைநெறி) சாமீபமுத்தி.
யோகம் - (சகமார்க்கம், தோழமைநெறி) சாரூபமுத்தி.
ஞானம் - (சன்மார்க்கம், ஞானநெறி) சாயுச்சியமுத்தி.

**157. சைவநாற்பாதங்களில உபாயநிலைகள் எத்தனை? உண்மைநிலைகள் எத்தனை?**

உபாயநிலைகள் - 16
உண்மைநிலைகள் - 16

தொடரும்..

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்,
தர்மாசிரியர். சாமித்தம்பி பொன்னுத்துரை B.A. (சிறப்பு), M.A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி

உ
சிவமயம்

# யாப்பிலக்கணம் (வினாவும் விடையும்)

## உறுப்பியலில் - அடி

சித்தாந்தரத்தினம் செல்வி வ. தேவராணி.

**76. அடியென்றால் என்ன?**

ஆகக் குறைந்தது இரண்டு முதலிய சீர்களைக் கொண்டு அமைவது அடி எனப்படும். இதனை ஆகக் குறைந்தது ஒரு தளையைக் கொண்டு முடிவது அடியென்றுகூறினும் பொருந்தும்.

**77. அடி எத்தனை வகைப்படும்?**

இது குறளடி என்றும் சிந்தடி என்றும் அளவடி என்றும் நெடிலடி என்றும் கழிநெடிலடி என்றும் ஐந்து வகையாகும். இவைகள் ஒவ்வொரு அடியிலும் இடம்பெறும் சீர்களின் எண்ணிக்கையைக் கொண்டு தீர்மானிக்கப்(நிர்ணயிக்கப்)படும்.

**78. மேற்கூறியவாறு சீர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அமையும் ஐந்தடிகளையும் உதாரணங்கள் மூலம் விளக்குக?**

**1. இரு சீரடிக் குறள் (குறளடி):**

இது மற்றையடிகள் எல்லாவற்றினும் குறுமை (குறுகி) உடையதாய் நிற்றலாற் குறள் எனப்பட்டது. இரு சீரால் வரும். இவ்வடி ஒரு தளை அடுத்து (ஒரு தளை கொள்ள) நிற்பதாகும்.

உதாரணம்:- திரைத்த சாலிகை
திரைத்த போனிரந்
திரைப்ப தேன்களே
விரைக்கொண் மாலையாய் - சூளாமணி.

"கனிமுன் நிரையும் நேரும் வருதல்
ஒன்றிய ஒன்றா வஞ்சித் தளையே"

என்ற கூற்றின்படி, வஞ்சித்தளை இடம்பெறும் வஞ்சிப் பாவிற்குரிய குறளடியை விலக்கி (நீக்கி), ஆசிரியர் தொல்காப்பியர் நான்கு முதல் ஆறுவரைக்கும் எழுத்தளவு கூறுவர். இதன்படி மேற்கூறிய செய்யுள், ஆறெழுத்துப் பெற்ற குறளடிகள் ஆகும். நான்கும் ஐந்தும் எழுத்தளவு பெற்றுவரும் செய்யுளடிகளும் உண்டு. எழுத்துகள் எண்ணப்படுவதில்லை என்பதையும் நினைவிற் கொள்க.

**2. முச்சீரடிச் சிந்து (சிந்தடி):-**

ஒவ்வொரு அடியும் மூன்று சீர்கொண்டு நிற்பதாகும். இச் சிந்தடியானது முன்னர் கூறப்பட்ட குறளடியை விடச் சிறிது நெடியதாகும். இவ்வடிகள் ஒவ்வொன்றும் மூன்று சீர்களையும் இரு தளைகளைப் பெற்றும் வருவதாகும். வஞ்சியடியைப் பெறாமல் வரும் (கனிச் சீருக்கு முன்னால் நேர் அல்லது நிரை வருதல்) ஆகிய வஞ்சியடியை விலக்கிய சிந்தடிக்கு ஆசிரியர் தொல்காப்பியர், ஏழு முதல் ஒன்பது வரைக்கும் எழுத்தளவு கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்:-

"இருது வேற்றுமை யின்மையாற்"

இவ்வடியில் இடம்பெற்ற ஒற்றெழுத்துக்களை நீக்கிவிட்டு எண்ணினால் ஒன்பது எழுத்துக்கள் அமைந்துள்ளதைக் காணலாம்.

இவ்வாறு ஒன்பது வரைக்கும் எழுத்தளவுள்ள சிந்தடிச் செய்யுள் ஒன்றை நோக்குவோம்.

"இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினாய்" - சூளாமணி

இச் செய்யுளில் உள்ள அடிகள் எல்லாம் ஒன்பதெழுத்தைப் பெற்றமைந்துள்ள சிந்தடிகளாகும். இவ்வாறு ஏழு எட்டு எழுத்துப் பெற்ற சிந்தடிச் செய்யுள்களும் வரலாம்.

**3. அளவடி (நேரடி):-**

இங்கே செய்யுளின் ஒவ்வொரு அடியும் நான்கு சீர்பெற்று அமைவதைக் காணலாம். இது அளவடி என்றும் நேரடி என்றும் இரு பெயரால் வழங்கப்படும்.

இங்கே ஒவ்வொரு அடிகளும் மூன்று தளைகளை உடையதாகவும் நான்கு சீர்களைப் பெற்றும் வருவதாகும். அளவடிக்கு ஆசிரியர் தொல்காப்பியர் பத்து முதற் பதினான்கு வரைக்கும் எழுத்தளவு கூறுவர்.

உதாரணம்:-

"தேம்பழுத் தினியதீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளித்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளும் மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே" - சூளாமணி

இச் செய்யுளில் முதலடி பன்னிரண்டு எழுத்துப் பெற்று வந்த அளவடியாகும். ஏனைய மூன்றடிகளும் பதின்மூன்றெழுத்துப் பெற்று வந்த அளவடிகளாய் இருத்தலைக் காண்க. பத்தும் பதின்னான்கு வரைக்கும் எழுத்தளவுடையதாக வேறு செய்யுள்களும் அளவடியில் வருதல் உண்டு.

4. நெடிலடி:-

ஐந்து சீர் கொண்டு ஒவ்வொரு அடியும் விளங்குதல் நெடிலடி ஆகும்.

உதாரணம்:-

"வென்றான் வினையின் றொகையாகி விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த வுணர்வின்னொழி யாது முற்றும்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்". - சூளாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் செய்யுளிலுள்ள அடிகள் பதின்னான்கெழுத்துப் பெற்று வந்த நெடிலடிகள் ஆகும் என்பதை அவதானிக்கவும்.

**5. கழிநெடிலடி:-**

ஒவ்வொரு அடியிலும் சீர்களின் எண்ணிக்கை ஐந்தினை விடக் கூடுதலாக அமைந்திருப்பின் **கழிநெடிலடி** எனப்படும். கழிநெடிலடி என்று கூறப்படுவது அறுசீரடி, எழுசீரடி, எண்சீரடி முதலியனவாகி வரும் எல்லா அடிகளையும் சுருக்கமாகக் கூறுமிடத்துக் கழிநெடிலடி எனக் கூறப்படும்.

உதாரணம்:-

**அறுசீரடி**

"இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெய
ரினவண்டு புடைசூழ" - சூளாமணி

இச் செய்யுளின் அடியானது அறு சீர்களைப் பெற்று வந்துள்ள **அறுசீரடி** ஆகும்.

**எழுசீரடி**

"கணிகொண்ட லர்ந்த நறவேங்கை யோடு
கமழ்கின்ற காந்த ளிதழால்" - சூளாமணி

இச் செய்யுளின் அடியானது ஏழு சீர்களைப் பெற்று வந்துள்ள **எழுசீரடி**யாகும்.

"கணிகொண்ட லர்ந்த நறவேங்கை யோடு
கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண்ட லர்ந்த வனமாலை சூடி
யகிலாவி குஞ்சி கமழ
மணிகுண்ட லங்க ளிருபாலும் வந்து
வரையாக மீது திவளத்
துணிகொண்டி லங்கு சுடர்வேலி னோடு
வருவானி தென்கொ றுணிவே". - சூளாமணி

இச் செய்யுளின் ஒவ்வொரு அடியும் எட்டுச் சீர்களைப் பெற்று வந்துள்ள எழுசீரடி ஆகும். இவ்வாறு எண்சீர் வரையும் பெற்றுவரும் அடிகளே சிறப்புடைய அடிகள் என்பது சில நூலார் கொள்கை.

**79. "இரண்டடி வெள்ளைக் கிழிபு" என்ற கூற்றினை உதாரணம் தந்து விளக்குக?**

வெள்ளை - வெண்பா, இழிபு - சுருக்கம், சிறுமை எனப் பொருள் தரும். இரண்டடியான் முடிவது வெண்பாவுக்குச் சுருக்கமாகிய சிற்றெல்லை ஆகும். இரண்டடியிற் சுருங்கி வெண்பா வருவதில்லை.

உதாரணம்:-

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை". - திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**80. "மூன்றடி அகவற் கிழிபு" என்ற கூற்றினை உதாரணம் காட்டி விளக்குக?**

மூன்றடியான் முடிவது அகவற் பாவுக்குச் சுருக்கமாகிய சிற்றெல்லையாகும்.
உதாரணம்:-

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே"

**81. "மூன்றடி வஞ்சிக்கு இழிபு" என்ற கூற்றினை உதாரணம் காட்டி விளக்குக?**

மூன்றடியான் முடிவது வஞ்சிப்பாவுக்குச் சுருக்கமாகிய சிற்றெல்லையாகும். குறளடியைப் பெற்று வரும் வஞ்சிப்பாவும், சிந்தடியைப் பெற்றுவரும் சிந்தடி வஞ்சிப்பாவும் மூன்று அடிகளால் உண்டாகிய சுருக்கமாகிய சிற்றெல்லையைக் கொண்டு அமையும் குறளடிவஞ்சிப்பாவிற்கு உதாரணம்:-

"மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
} இம் மூன்று அடிகளும் குறளடி வஞ்சிப்பா விற்குச் சுருக்கமாகிய சிற்றெல்லை ஆகும்.
எனவாங்கு
இனிதின் ஒதுங்கிய இறைவனான
மனமொழி மெய்களின் வணங்குவதும் மகிழ்ந்தே". - திருப்பாமாலை

இச் செய்யுளில் முன்னின்ற மூன்றடிகளுமே வஞ்சிக்குரிய அடிகளெனக் கொள்க. மற்றையன முறையே தனிச்சொல்லும் அகவலடிகளுமாம். இச் செய்யுளைப் போலவே சிந்தடி (மூன்றுசீரால்) ஆக்கப்பட்ட மூன்று அடிகளை உடைய சிந்தடி வஞ்சிப்பாவும் சுருக்கமாகிய சிற்றெல்லைச் செய்யுள்களும் இடம் பெறலாம். இவை மூன்றடி வஞ்சிக்கு இழிபு என்ற கூற்றினை விளக்குகின்றன.

**82. பெருக்கம் என்றால் என்ன?**

**உரைப்போர் உள்ளக் கருத்தின் அளவே பெருமை**. பெருமை என்பது பெருக்கம் எனப் பொருள் தரும். உரைப்போர் என்றது பாடும் புலவரைக் குறிக்கும். கருத்து - கருதப்பட்டது எனப் பொருள்படும்.

ஆசிரியர் தொல்காப்பியர் ஆசிரியப்பாவின் பெருக்கமாகிய பேரெல்லை ஆயிரமாகும் என்பர். மதுரைக்காஞ்சி என்னும் அகவற் பாட்டும் அடியால் ஆயிரத்தை அணுகிற்று.

**83. குறளடி வரும் இடங்கள் பற்றி உமக்குத் தெரிந்தவற்றைக் கூறுக?**


1) குறளடி வஞ்சிக்பாவில் வரும்
2) வஞ்சித் தாழிசையில் வரும்
3) வஞ்சித் துறையில் வரும்
4) இணைக்குறளாசிரியப் பாவில் இடைஇடையே வரும்
5) கலிப்பாவில் அம்போதரங்க உறுப்பில் வரும்

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலேசிய அருள்நெறித் திருக்கூட்டத்தில் திருவாதவூரடிகள் புராணபடனம்
13.12.2018





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் கொழும்பு திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தினரால் Sharp Graphics (Pvt.) Ltd. இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.